Registered as a Newspaper in Sri Lanka No.A 15 ஆண்டுச் சந்தா: 3-50 விலை சதம் 25

# ஐக்கியதீபம்


ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | | |
|---|---|---|
| காசுப்புத்தகம் | ஐ. நா. சங். | 30 00 |
| அங்கத்தவர் பேரேடு | | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | | 2-60 |
| கடன் மனுப்பத்திரம் | ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி | ஐ. நா. ச. | 15 |
| கேள்விப் பத்திரம் | | 10 |
| மத்தியஸ்த மனு | | 10 |


மலர்: 34 (புதிய தொடர்) ஆனி, 1978 இதழ் 1

## விவசாயக் கடன்களைத் திருப்பிக் கொடுக்காதவர் மீது

# சட்ட நடவடிக்கை

## யாழ் அரசாங்க அதிபர் எச்சரிக்கை

**விவசாயக் கடன் பெற்றவர்கள் குறித்த தவணையில் அதனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் எச்சரித்துள்ளார்.**

இந்த எச்சரிக்கை பெரிய சுவரொட்டி வடிவில் மக்கள் வங்கிக் கிளைகளிலும், வேறு பொது இடங்களிலும் காட்சியளிக்கின்றன.

குறித்த இக்கடனைத் திருப்பிச் செலுத்தா விட்டால் புதிதாக விவசாயக் கடன்களை எடுக்க முடியாது என்றும் அவர் அச்சுவரொட்டிகளில் மேலும் தெரிவித்துள்ளார்.

விவசாயக் கடன்களை மேலும் பெற்று நாட்டின் அபிவிருத்திக்கு உழைத்து நல் வாழ்வை வகுத்துக் கொள்ள வழி அமைக்கும் வகையில் குறித்த தவணையில் மேற்படி கடன்களை செலுத்துமாறு மேலும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கூட்டுறவை மீட்க அரசு முயற்சிக்கிறது

அரசாங்கத்தின் கையாட்களின் கைகளில் இருந்த கூட்டுறவு இயக்கத்தை இன்று அரசாங்கம் மீட்டெடுக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அளவெட்டி தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் பொன் விழாவில் பிரதம விருந்ினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் காங்கேசன்துறை தேசியப் பேரவை உருப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்குச் சங்கத்தலைவர் திரு. க. கந்தையா தலைமை வகித்தார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி வாழ்த்துப்பா பாடினார்.

நாவைக்காத்து ஒழுங்காக நடப்பது நாணயம் எனப்படும். காசு விஷயத்திலே அவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே நாணயம் என்ற சொல் காசைக் குறிப்பதற்கும் வழங்கப் படுகிறது என்று மேலும் பேசுகையில் திரு அமிர்தலிங்கம் விளககினர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க நிறுவனங்களை நம்பியிராது பொன் விழாவை இன்று கொண்டாடும் இந்தச் சங்கத்தைப்போல தமது சொந்தக் கால்களில் நிற்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறயதாவது: ஐ நா. சங்கங்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி என்ற அடிப்படையில் கூட்டுறவுத்துறை சிறப்பாக வளர உதவியிருக்கிறது இச்சங்கங்களின் பழைய பண்பும், ஒழுங்கும் இன்று சிதைந்து விட்டன. ஆதலால் இச்சங்கங்களுக்குப் புத்துயிரளித்துப் பாதுகாக்க வேண்டும்,

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுச் செயலாளர் திரு. க. கணேசலிங்கம் பேசுகையில் ஐக்கிய நாணய சங்கங்கள் சிறந்த கூட்டுறவுத் தலைவர்களை உருவாக்கியுள்ளதோடு கிராமங்களில் சிறந்த ஐக்கியத்தையும் வளர்த்திருக்கிறது என்று குறிப்பிடடார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் இன்று 15 ஐக்கிய நாணய சங்கங்கள் திறம்பட இயங்கி வருகின்றன. ஐக்கிய நாணய சங்கங்களை நல்ல முறையிலே வளர்ப்பதற்கு அங்கத்தவர்களை அவற்றில் அதிமாகச் சேர்க்க வேண்டும் என்று கூறினர்.

தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு S.E. யோசேப்பேசுகையில் மாதம் ஒரு முறையாவது சங்கங்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்றும் கடன்களைத் தவணை தப்பாது திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### விளைபொருள் சந்தைப்படுத்துவது பற்றிய கருத்தரங்கு

விவசாய கூட்டுறவு சந்தைப்படுத்துவது பற்றி பிலிப்பைன்சிலும் தாய்லாந்திலும் மலேஷியாவிலும் அண்மையில் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

## கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி

# மகாநாடு

கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்ற எண்ணமும் ஆர்வமும் உலகில்வளர்ந்து வருவதால் அனைத்துலகக் கூட்டுறவுச் சமமேளனத்தின் ஆதரவில் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் குறித்து முதலாவது மகாநாட்டை அகில உலக ரீதியில் ரோமில் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இம்மகாநாடு கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் அவற்றின் நவீன உலகத் தொடர்பு பொருளாதார சமூக வளர்ச்சியில் கைதொழில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் அனைத்துலக நிறுவனங்களின் பங்கு ஆகிய விடயங்களை ஆராயும் அடிப்படையில் நடைபெறும்.

## கருத்தரங்கு

இந்த ஆண்டு யூலை ஆகஸ்ட் மாதங்களில் கிராமிய வறுமையும் கூட்டுறவு இயக்கமும் என்ற பொருள் பற்றி சுவிடனில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கிறது.

## வேறு நிறுவனங்களில் பதவி

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உதவிச் செயலாளர் திரு. நீல அதிகாரம்கே, பதவி நிலை உத்தியோகத்தர் திரு. சிறிவாடின ஆகியோர் ஜுலை மாத முடிவோடு வேறு நிறுவனங்களில் பதவிகளை ஏற்றுச் செல்ல விருக்கின்றனர்.

# இந்தியச் சுற்றுலா

இந்திய தேசிய கூட்டுறவுச் சமாசம் அங்குள்ள கூட்டுறவு இயக்கத்தைப் பார்வையிடுவதற்கு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைக்கு அழைப்பு விடுத்துள்ளது. அதன் அடிப்படையில் அங்கு செல்லவிருக்கும் கூட்டுறவாளர் குழுவில் வெற்றிடம் ஏற்பட்டால் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையில் பணிபுரியும் லிகிதர், சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் தரங்களுக்கு உட்பட்ட ஊழியர்களுள் ஒருவர் கலந்து கொள்ளலாமென்றும் விரும்பியோர் அதற்கு விண்ணப்பிக்குமாறும் மேற்படி கூட்டுறவுச் சபையின் பொதுச்செயலாளர் சுற்றுநிருபம்மூலம் அறிவித்துள்ளார்.

(முற்றொடர்)

# கூட்டுறவின் குறிக்கோள்களும் கொள்கைகளும்-- வளர்முகநாடுகளிலே அவற்றின் செயற்பாடுகளும்

அரசாங்க உத்தியோகத்தரிடம் முடிவெடுக்கும் பொறுப்பை விட்டுவிடும் பழக்கம் பற்றி இந்திய விவசாய அமைச்சர் கூறியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்கும். ''கூட்டுறவு இயக்கம் வெற்றியீட்ட வேண்டுமாயின் தனது சொந்த வள ஆதாரங்களையும் தனது பணியாளர்களையும் பயிற்றுவிக்கும் வல்லமையையும் தானே கட்டி எழுப்ப வேண்டும் என்பதை நானே வெளிப்படையாகவே ஒப்புக் கொள்கிறேன். மற்றவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கும் பழக்கம் பொதுத்துறை நிறுவனங்களைப் பொறுத்தவரை விரும்பத் தகாதது. கூட்டுறவுத்துறையைப் பொறுத்தவரை இப்பழக்கம் அறவே தகாதது. ஏனெனில் இத்தகைய ஆட்கள் பெரும்பாலும் கூட்டுறவு இலட்சியங்களிலே ஊறித் திளைக்காதவர்கள். அரசு இயந்திரத்தையும் கூட்டுறவு இயக்கத்தையும் அவர்கள் சிண்டு முடிந்து விடக்கூடும். கூட்டுறவு இயக்கத்தில் அவர்களுக்கு எந்த விதப் பற்றுதலோ பிடிப்போ இல்லாததினால் அதனை உருச்சிதைக்கக் கூடும்''

இந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்புவதற்கு தகமை வாய்ந்தவர்களை வெளியிலிருந்து ஈர்க்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களால் கவர்ச்சிகரமான சம்பளங்களை வழங்க முடியாவிட்டால் கூட்டுறவு இயக்கத்தில் பணியாற்றுவதற்கென சிறப்பாக நியமிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்களை விசேட சேவையில் அமர்த்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுது தான் இவர்கள் கூட்டுறவு இயக்கத்திலே பணியாற்றுவதன் பயனாகப் பெறும் அனுபவத்தையும், திறமையையும் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து பெறக்கூடியதாய் இருக்கும். இத்தகைய விசேட சேவை போன்ற ஒழுங்கமைப்பு இல்லாவிடில் இவர்கள் பெறும் அனுபவமும், திறமையும், கூட்டுறவு இயக்

P. E. வீரமன்

கத்தில் இழக்கப்பட்டு விடும். எனினும், இது நிரந்தர தீர்வாக இருத்தலாகாது. உயர்ந்த சம்பளங்களை வழங்கக்கூடிய நிலையில் கூட்டுறவு இயக்கம் இருந்தால் அது உயர்ந்த பதவிகளில் கடமையாற்றுவதற்கு தனக்கென பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

குடியாட்சிப் பாங்கான கட்டுப்பாடு என்ற கொள்கை எவ்வாறு இந்தியாவிலும் இலங்கையிலும் வேறு வளர்முக நாடுகளிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்பதனை சற்று விரிவாக நான் ஆராய்ந்தமைக்குக் காரணம் அக்கொள்கை கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான வளர்ச்சிக்கு - அதுவும் அவ்வியக்கம் அதிகமாகத் தேவைப்படும் நாடுகளாகிய வளர்முக நாடுகளில் — இன்றியமையாததாய் விளங்குவதால். பதிவுகாரியஸ்தரின் கட்டுப்பாட்டு அதிகாரங்களும் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் முகவர்கள் என்ற நிலையும் பொது விதியாக இலங்கையிலும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் உள்ளது பங்களாதேஷில் நெறியாளர்களை நியமிக்கும் பழக்கம் கைவிடப் பட்டுவிட்டது — கார் முகிலில் தோன்றும் வெள்ளிக் கோடாக இது விளங்குகின்றது. தாய்லாந்திலும், மலேஷியாவிலும், சிங்கப்பூரிலும் பதிவுகாரியஸ்தருக்கு ஏராளமான அதிகாரங்கள் உள. பிலிப்பைன்சில் வெவ்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாக வெவ்வேறு சட்டங்கள் உண்டு. பொதுப்படையாகக்கூறின் இச்சட்டங்கள் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு மதிப்பளிக்கின்றன. ஆனால் நூதனமான சட்டம் ஒன்று அங்குண்டு. கூட்டுறவுச சந்தைப்படுத்துதல் சட்டத்தின்படி ஆரம்ப விவசாயச் சங்க உறுப்பினரைப் பொறுத்தவரை அவர் அங்கு அச்சங்கத்திற்குக் கொடுக்கும் விளைபொருட்களின் அளவிற்கு ஏற்ப அவருக்கு வாக்குரிமை உண்டு. ஆரம்ப சங்க மட்டத்தில் ஒருஉறுப்பினருக்கு ஒரு வாக்குஎன்ற கூட்டுறவுக் கொள்கைக்கு இது முரணானது இந்தோனேஷியாவில் நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சட்டம் ஏனைய வளர்முக நாடுகளின் கூட்டுறவுச் சட்டங்களிலும் பார்க்க கூட்டுறவுக் கொள்கைகளுக்கு மதிப்பு அளிக்கின்றது. குடியாட்சிப் பாங்கான கட்டுப்பாடு என்ற கொள்கையை இச்சட்டம் மீறவில்லை.

## ஆதாயத்தை ஒழித்தல்

ஜனநாயகமே கூட்டுறவு இயக்கத்தின் சாரம். அதன் முக்கிய செயற்பாடு பொருளாதாரச் சுரண்டலை ஒழித்துக் கட்டுதல்.

வணிக நிறுவனம் ஒன்று ஏனையோரின் பொருளாதாரத் தேவைகளை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பொருட்டு தனது முதலைப் பயன்படுத்துகின்றது. இதன் விளைவாக ஈட்டப்படும் ஆதாயத்தை அதன் பங்குதாரரிடையே — அவர்கள் வைத்திருக்கும் பங்கு முதலுக்கு ஏற்ப —அது பங்கிடுகின்றது. மூலதனம் இன்றியமையாதது என்பதையும் அது தொழிற் சக்திக்கு கூடிய விளைவாக்கத்தை அளிக்கின்றது என்பதையும் ரொச்டேல் முன்னோடிகள் உணர்ந்தனர், எனவே மூலதனத்தை வழங்குபவர்களுக்கு கைமாறு கொடுக்கபபட வேண்டியதன் தேவையை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். மூலதனத்திற்கு அல்லது அதன் சொந்தக்காரனுக்காகச் செயற்படாது மூலதனத்தோடு தொழில் சக்தி செயற்பட வேண்டும் என்பதே அவர்களது கருத்து. எனவே, வியாபாரத்தால் ஏற்படும் மேலதிகத்தில் தமக்குப்பங்குண்டு எனமூலதனச் சொந்தக்காரர்கள் கோரியதை அவர்கள் நிராகரித்தனர். நியாயமான வட்டி வீதத்துக்குமட்டுமே அவர்களுக்கு உருத்துண்டு என அவர்கள் கருதினர். அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் முன்னை நாள் தலைவர் பேராசிரியர் ஜீட் கூறியது போல மூலதனத்தை ஆதாயத்தை எடுத்துச் செல்பவனை ஆக்காது வெறும் ஊதியம் (வட்டி) பெறுபவனாக ஆக்கியதன் மூலம் கூட்டுறவு அமைப்பு ஒரு சமூகப் புரட்சியை உண்டு பண்ணிற்று.

(வளரும்)

# போனே நிதிக்குப் பங்களிப்பு

கனடா, டென்மார்க், மேற்கு ஜெர்மனி, பின்லாந்து, பிரான்ஸ், யப்பான், நோர்வே, சுவீடன், சுவிற்சலாந்து, வட அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் அங்கத்துவ சங்கங்கள் இதுவரையிலும் போனே நிதிக்கென 13, 342 பவுணை தமது பங்களிப்பாகச் செலுத்தியுள்ளன.

கிழக்கு ஜெர்மனியிலும், போலாந்திலும் உள்ள அங்கத்துவ நிறுவனங்கள் உள்ளூர் நாணயத்தில் தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ளன. இதனை அவ்வத் நாடுகளிலேயே பயன்படுத்தலாம்.

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் முன்னை நாள் தலைவர் கலாநிதி மொறிஸ் போனேவை கௌரவிக்கும் முகமாக 1975 ஒக்டோபரில் போனே நிதி அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் செயற்குழுவினால் உருவாக்கப்பட்டது. கூட்டுறவாளர்கள் ஏனைய நாடுகளுக்கு விஜயம் செய்து கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியை ஆராய்வதற்கும் அதற்கு உதவுவதற்கும், வெவ்வேறு நாடுகளின் கூட்டுறவு இயக்கங்களுக்கிடையே நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கு போனே நிதி பயன்படுத்தப்படும்.

# பாடப்புத்தக விநியோகம்

மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்களை விநியோகிப்பதில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் அரிய சாதனை புரிந்துவருகின்றது இந் நிறுவனம் 40,000 பள்ளிக்கூடங்களுக்கு புத்தக விநியோகம்செய்து வருகிறது.

1975–76ல் ரூ199. 16 லட்சத்திற்கும், 1976–77ல் ரூ 225.38 லட்சத்திற்கும் இவ்விணையம் பாடப்புத்தகங்களை விற்பனை செய்திருக்கிறது.


சிறந்த தரமுள்ள பொருட்களைப்பெற
கூட்டுறவின் ஆக்கப்பணிக்கு உதவுங்கள்.
குறைந்த விலையில் நிறைந்த பயன்தரும்

**பண்கோப் சேட்வகைகள்**
**பண்கோப் காற்சட்டைகள்**
**பண்கோப் நைலெக்ஸ் சேலைகள், சூட்டிங் வகைகள்.**

**நல்லெண்ணெய்**
**நீல சவர்க்காரம்**
**கைத்தறிப் புடவைகள்**
**பாண், பிஸ்கட், கேக் வகைகள்**

ஆகியவற்றை

பண்டத்தரிப்புப் பரிஷ்
ப.நோ.கூ.சங்கத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்

தொலைபேசி இல.: பண்டத்தரிப்பு 808
பண்டத்தரிப்பு 36


# ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கி சென்ற ஆண்டு தொடர்ந்தும் விவசாயத்திறகு முக்கியத்துவம் கொடுத்து வந்தது. நாற்பத்தைந்து வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு வளர்ச்சியுற்று வரும் 16 நாடுகளுக்கு அபிவிருத்திவங்கி கடன் வழங்கியது. அத்துடன் 42 தொழில் நுட்ப உதவித் திட்டங்களுக்கும் வங்கி அங்கீகாரம் வழங்கியது.

சென்ற ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி மொத்தமாக வழங்கிய கடன் தொகை 88 லட்சம் டொலர்.

# கூட்டுறவுத் தினவிழா

பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 23–7–78 ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் கூட்டுறவுத் தின விழாவை கோலாகலமாகக் கொண்டாட விருக்கின்றது.

இவ்விழாவை யொட்டி ஐஸ்கட்டியைச் சுமந்து கொண்டு ஓடுதல், இயந்திரக் கட்டுமர ஓட்டம், இயந்திர வள்ள ஓட்டம் தும்புக் கண்ணுடி ஓட்டம் பாய்மர ஓட்டம் கட்டுமரம் வலித்தல், நீச்சல் முதலியவற்றில் போட்டிகள் நடாத்தப்படும்.

கவியரங்கு, பட்டிமன்றம், நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# தமிழகத்தில் கூட்டுறவுக் கடன்

தமிழகத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும், ஏறக்குறைய எல்லா விதமான பொருளாதாரப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளன மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் உதவியுடன், மாவட்ட அளவில் தமது செயல் எல்லைகளுக்குட்பட்டுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவியளித்து வருகின்றன. அவற்றின் முக்கிய பணி விவசாயக் கடன் வழங்குவதாகும். எனவே, அப்பணியில் அவை தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. தமிழகத்தில் குறுகிய காலப் பயிர்க்கடன் மற்றும் துணைத் தொழில்களுக்கு மத்தியகாலக்கடன் வழங்க, கிராம மட்டத்தில் 4,800 வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்களும், மாவட்ட அளவில் 16 மத்திய கூட்டுறவு வங்கிகளும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியும் இயங்கி வருகின்றன.

மாவட்ட அளவில், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கியும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இரண்டு மத்திய கூட்டுறவு வங்கிகளும் இயங்கி வருகின்றன வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்குகின்றன மத்திய வங்கிகள், தமது செயல் எல்லைகளுக்குட்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமது பங்குத்தொகை, ஒதுக்கீடு நிதிகள் மற்றும் வைப்புத்தொகைகளிலிருந்தும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் மூலமாக வரும் ரிசர்வ் வங்கியின் நிதியுதவியிலிருந்தும், கடன் வழங்கி வருகின்றன. மேலும், மாநிலக் கூட்டுறவு வங்கி, தனது சொந்த நிதியிலிருந்தும் மத்திய வங்கிகளுக்குக் கடனளிக்கிறது. மத்திய வங்கிகள் தமது செயல் எல்லையில் இயங்கிவரும் வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்கள் மற்றும் பிற வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பாகும் மாநில வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும்

## கூட்டுறவு அமைப்பில் விவசாயிகள்

தமிழகத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும், சராசரி மூன்று கிராமங்களுக்கு ஒரு சங்கம் வீதம், வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்களில் 31-3-1977-ன்படி, 37-96 லட்சம் விவசாயக் குடும்பத்தினர் உறுப்பினர்களாக உள்ளனர். இது, மொத்தமுள்ள விவசாயக் குடும்பத்தில் 87 சதவிகிதம் ஆகும். இவர்களில் சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகள் 22, 13 லட்சம். இது மொத்தம் உள்ள சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளின் எண்ணிக்கையில் 80 சதவிகிதம் ஆகும். 1976–77 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெரு முயற்சியின் விளைவாக, இவ்வளவு அதிகமாக—குறிப்பாக நலிவுற்ற பிரிவின் பெரும்பகுதியினரை—கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்க முடிந்தது

## கடன் அளவு

முதலாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் விவசாய நாணய சங்கங்கள் மூலமாக ஆண்டுக்கு ரூ. 5 கோடி என்ற அளவில் கடன் வழங்கபபட்டு வந்தது. இரண்டாவது திட்ட இறுதி ஆண்டில் அது ரூ. 25 கோடியாகவும், மூன்றுவது திட்ட இறுதி ஆண்டில் ரூ 30 3[illegible] கோடியாகவும், நான்காம் திட்ட இறுதி ஆண்டில் ரூ. 78 82 கோடியாகவும் உயர்ந்தது. ஐந்தாவது திட்ட காலத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும், முறையே ரூ. 87-6[illegible] கோடி, ரூ 02-8[illegible] கோடி, ரூ 125-12 கோடி கடன் வழங்கப்பட்டது. நடப்பு 1977–78ல், ரூ 135 கோடி அளவுக்கு கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ 5 கோடி மத்திய காலக் கடனாக இருக்கும். தமிழகத்தின் குறுகியகால விவசாயக்கடன் தேவை சுமார் ரூ. 200 கோடி இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது 1976–77-ம் ஆண்டில் தமிழகத்தின் மொத்த குறுகிய காலக்கடன் தேவையில் 60 சதவிகிதம் வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்களால் கொடுக்கப்பட்டுள்ளது. 1977–78 நடப்பு ஆண்டில் இது 65 சத விகிதமாக உயரும்

## பயிர்க் கடன்

1965–66-ம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பயிர்க்கடன் முறையானது, கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மகத்தான வளர்ச்சியின் பயனாகும் பயிர்க்கடன் வழங்குவதன் அடிப்படையும், நடைமுறையும் கடன் கோரும் மனிதனின் கடன் பெறும் தகுதியைப் பொறுத்து இல்லாமல், கடன் கோரும் காரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு உறுப்பினரின் விவசாயக் கடன் தேவையின் அளவும், மற்றும் உற்பத்திக்குத் தேவைப்படும் பொருட்களின் அளவும் முன்னதாகவே கணிக்கப்பட்டு, ஒவ்வொரு உறுப்பினருக்கும் கடனளவு நிர்ணயிக்கப்படுகிறது இம்முறையில் கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள், பல்வகைப் பயிர்களுக்குத் தேவைப்படும் கடனளவு, பயிரிடப்படும் மட்டம் மற்றும் கடனைத் திரும்ப வசூலிக்கும் காலமும் ஆகும். மேலும், கடனை ரொக்கமாகவும் பொருட்களாகவும் கொடுப்பதுவும் ஆகும்.

## தரத்தில் மேம்பாடு

பினாமிக் கடன் வழங்குதல் மற்றும் பிற ஒழுங்கீனங்களைத் தவிர்க்கும் பொருட்டு சமீபத்தில் முக்கியமான சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன:

உறுப்பினர்களுக்குப் பாஸ் புத்தகம் வழங்குதல்.

பயிர்க் கடனில் பணப் பகுதியை ரொக்கமாகப் பட்டுவாடா செய்வதற்குப் பதிலாக உறுப்பினரின் சேமிப்புக் கணக்கில் வரவு வைத்தல்.

முதலில் குறிப்பிட்டதை அனைத்து வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்களும் பின்பற்றுகின்றன. இரண்டாவது முறையை 1974 முதல் படிப்படியாக 4.089 கிராமச் சங்கங்கள் பின்பற்றுமாறு செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள சங்கங்களிலும் இம்முறை நடப்பு ஆண்டில் கடைப்பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## உர விநியோகத்தில் கவனம்

பயிர்க்கடனில் ஒரு பகுதி உரமாகவும் மறு பகுதி ரொக்கமாகவும் கொடுக்கப்படுகிறது. 1976–77-ல் வழங்கப்பட்ட மொத்த குறுகியகாலக் கடனாகிய ரூ. 119 33 கோடியில் ரூ. 44 54 கோடி பொருளாகக் கொடுக்கப்பட்டதாகும். இது மொத்தக் கடனில் 37 சதவிகிதம். இவ்வாறு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உரங்களைக் கடனின் பகுதியாக வழங்குதல் மூலம் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கிய கவனம் செலுத்திப் பணியாற்றி வருகின்றன.

## வைப்புத்தொகை

வைப்புத்தொகை திரட்டும் முயற்சியில் தமிழகத்தில் உள்ள 16 மத்திய கூட்டுறவு வங்கிகள், 19[illegible]–66-ல் இருந்த தமது 42 கிளைகளை, 1976–77-ல் 346 கிளைகளாக அதிகரித்துள்ளன. இதன் விளைவாக மத்திய கூட்டுறவு வங்கிகளின் வைப்புத்தொகை சென்னை மத்திய கூட்டுறவு வங்கி உட்பட, 1965–66-ல் இருந்த ரூ 19·69 கோடியிலிருந்து, 1976–77-ல் ரூ 91 கோடியாகப் பெருகியுள்ளது. இவ்வங்கிகள் பல கவர்ச்சிகரமான வைப்பு நிதித் திட்டங்களை வகுத்துள்ளன. இவ்வாறு, வைப்புத்தொகை திரட்டுதல் மட்டுமின்றி, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குதல், வழங்கிய கடனை வசூலித்தல், மேலும் கிராம நடுத்தர மக்களுக்கு வங்கி வசதிகள் அளித்தல் ஆகிய பணிகளை ஆற்றி வருகின்றன.

தமிழகத்தில் உள்ள மொத்தம் 334 கிளைகளில், 166-ல் ரூ. 10 இலட்சத்துக்கும் குறைவான வைப்புத் தொகை உள்ளது இவற்றிலும் 31-3-1978-க்குள் ரூ. 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட அளவு வைப்புத் தொகை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977–78-ல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மேலும் ரூ. 20 கோடி வைப்புத்தொகை வசூலிக்க திட்டமிட்டுள்ளன.

## விவசாயச் சார்பற்ற கடன்கள்

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள் கடனுதவி வழங்குகின்றன. ரிசர்வ் வங்கி அனுமதித்த மொத்தக் கடன் தொகையான ரூபாய் 9 0 கோடியுடன் தமது சொந்த நிதியிலிருந்து ரூ 3 11 கோடி இந்த நெசவாளர் சங்கங்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவுப் பண்டகசாலைகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பால்வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றுமுள்ள இதரவகைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மத்திய வங்கிகள் தமது சொந்த நிதியிலிருந்தும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் பெற்றும் நிதியுதவி செய்து வருகின்றன.

## சிறு தொழில் வளர்ச்சியில் கவனம்

தமிழகத்தில் கூட்டுறவு நகர வங்கிகள் சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும், குறிப்பிடத்தக்க அளவு நிதி வசதி செய்ய முற்படவில்லை. போதிய தொழில் நுட்ப ஆலோசனை இன்மையே இதற்கு முக்கிய காரணமாகும். துவக்கத்தில் ஆறு மத்திய கூட்டுறவு வங்கிகள் ஒவ்வொன்றும் (சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, சேலம் மற்றும் கோயமுத்தூர்) தொழில் நுட்பப் பிரிவை அண்மையில அமைத்துள்ளன. இவ்வங்கிகளில் உள்ள ஒவ்வொரு தொழில் நுட்பப் பிரிவும், கடன் விண்ணப்பம் தயாரிப்பதில் அந்தப் பகுதிகளிலுள்ள நகர வங்கிகளுக்கு உதவுகின்றன.

## குடும்பச் செலவு கடன்

197[illegible]-ம் ஆண்டு இறுதியில் கடன் நிவாரண சட்டத்தினால் தனி நபர்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகிவிட்டதால், பாதிக்கப்பட்ட நலிந்த பிரிவினருக்கு உதவும் பொருட்டு மத்திய கூட்டுறவு வங்கிகள் தக்க ஏற்பாடுகள் செய்ய முனைந்தன. தமது கிளைகள் மூலமும் நகர வங்கிகள் மற்றும் வேளாண்மைக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாகவும் நகை ஈட்டின் பேரில் அதிக அளவில் கடன் வழங்குகின்றன. 1976–77-ல் மத்திய கூட்டுறவு வங்கிகள் தமது கிளைகள் மூலமாக ரூபாய் 8 25 கோடியும் விவசாய நாணய சங்கங்கள் மூலமாக ரூ 7·30 கோடியும் நகை ஈட்டுக் கடன்களாக வழங்கியுள்ளன. நகர வங்கிகள் பெரும்பாலும் தமது சொந்த நிதி வளத்திலிருந்தும் ஒரு பகுதி மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கடனாகப் பெற்றும் ரூ. 23·96 கோடி அளவிற்கு நகை ஈட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன.

சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் கிளைகள் உட்பட எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களும் சேர்ந்து ரூபா 40 10 கோடி அளவிற்கு நகை ஈட்டுக்கடன் வழங்கியுள்ளன. 1975—76-ல் வழங்கியநகை ஈட்டுக்கடன் ரூ. 22 கோடி அளவிற்கேயாகும். இது தவிர கிராமப்புறங்களிலுள்ள நலிவுற்ற பிரிவினருக்கு வேளாண்மைக் கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலமாக நபர் பிணையின் மீது குடும்பச் செலவுக் கடன் வழங்குதல் 197[illegible]–77-ல் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டது. திருமணம். மருத்துவச் செலவு மற்றும் ஈமச்சடங்கு போன்ற அவசரச் செலவுகளுக்கு இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன 1976–77 இந்த வகையில் ரூபா 23 63 இலட்சத்திற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## விவசாயச் சேவைக் கூட்டுறவுகள்

ஒரே இடத்தில் கடன் வசதி, விவசாயத்திற்குத் தேவையான உரம்போன்ற பொருட்கள், விற்பனை வசதி, அவசியப் பண்டங்கள் வழங்குதல் மற்றும் தொடர்பான பல வசதிகளை விவசாயப் பெருமக்களுக்கு வழங்குவதற்கு 1976—77-ல் தமிழகத்தில் 12 விவசாயச் சேவைக்கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயக்கடனும் பொருட்களும் வழங்குவதை ஆதரிக்க மத்திய கூட்டுறவு வங்கிகள் தனி ஆர்வம் காட்டி வருகின்றன 1976—77-ல் மேற்படி 12 சங்கங்களுக்குக் கொடுத்து நிலுவையாய் இருந்த கடன் தொகை ரூ. 1·38 கோடியாகும். குடும்பச் செலவுக் கடன் வழங்கவும், நுகர்பொருள் வழங்குவதில் ஈடுபடவும் மத்திய கூட்டுறவு வங்கிகள் இச்சங்கங்களுக்கு காசுக்கடன் வசதி செய்து கொடுத்துள்ளன.

## மலைவாழ் மக்களுக்குக் கூட்டுறவுகள்

மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகக் கடன் வசதியோடு இணைந்த விற்பனை, மற்றும் பிற பணிகள் புரிய பெரிய அளவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன அவை சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலை, கொல்லிமலை கல்ராயன் மலையிலும், தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலையிலும், வடஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகளிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சை மலையிலும் நிறுவப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட மத்திய வங்கிகள்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இப்போதுள்ள சங்கங்கள் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்ட பெரிய சங்கங்களாக இருப்பதால் அவைகளை நேரடியான மேற்பார்வை செய்ய முடியாதிருக்கிறது. அவற்றினை புதிய அமைப்பில் நிறுவ வேண்டும். அவைகள் பொருளாதார ரீதியாகப் பலம் பொருந்திய சங்கங்களாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு திரு. சி. இராசரத்தினம் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

## கூட்டுறவு அர்த்தம் மறக்கப்பட்டுவிட்டது

தொடர்ந்து அவர் சாட்சியமளிக்கையில், உப விதிகளும் ஒழுங்குமுறைகளும் இப்போது நிருவாகத்தினுல் சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. கௌரவ சேவை என்பதன் அர்த்தம் அடியோடு மறக்கப்பட்டு விட்டது. உறுப்பினர்கள் கூட்டத்திற்கு தாம் விரும்பிய நேரங்களில் போய் விடுகிறுர்கள். ஆனுல் கூட்டத்திற்கு வந்ததற்காகப் பணம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நெறியாளர் சபை உறுப்பினர்களுக்கு எத்தகைய பணம் கொடுக்கப்படுவதையும் நான் எதிர்க்கின்றேன் என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

## நிதியுதவி கூ. ச. வழங்க வேண்டும்

திரு. இராசரத்தினம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: விவசாய முயற்சிகளுக்குத் தேவைப்படும் நிதியுதவிகளை கூட்டுறவுச் சங்கங்களே வழங்கவேண்டும். மக்கள் வங்கி போன்ற வேறு நிறுவனங்களிடம் இப்பணி ஒப்படைக்கப்படலாகாது. நிருவாகக் குழுவிற்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஊடாகக் கடன்களை வழங்கவேண்டும். இக்குழு கடன் பெறுபவரின் வேலையை மேற்பார்வை செய்வதோடு கடன்களையும் அறவிடும். வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போன்ற நிறுவனங்கள் மீட்கப்பட்டு மறுசீரமைக்கப்பட வேண்டும்;

இப்பொழுதுள்ள கணக்கு வைக்கும் முறை கஷ்டமுள்ளதாக இருப்பதாலும், இத்தகைய முறையை நடைமுறைப்படுத்துவதற்கு சங்கங்கள் அதிகமான பணத்தைச் செலவிட வேண்டியுள்ளதாலும் கணக்கு வைக்கும் முறை சீராக்கப்பட வேண்டும்.

# “சங்க எல்லைப்பரப்பைக் கு...

## கூட்டுறவு மறுசீரமைப்பு விசாரணையில்...

## ஒரே ஆணையாளர்

மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் தமது எல்லைப்பரப்பிலுள்ள கிளைகளின் மீது கட்டுப்பாடுள்ளவையாய் இருத்தல் வேண்டும். கணக்குப் பரிசோதனைக்கும் நிருவாகத்திற்கும் ஒரே ஆணையாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

## மீண்டும் கூட்டுறவு வங்கி

கூட்டுறவுச் சங்கங்களை திணைக்கள உத்தியோகத்தர் நிருவகிப்பதால் ஊழலும், நிருவாகச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. எல்லாச் சங்கங்களுக்கும் தேவையானவற்றை வழங்கீடு செய்யவல்ல வகையில் கூ. மொ. வி. பலப்படுத்தப்படல் வேண்டும். மீண்டும் கூட்டுறவு வங்கிகள் நிறுவப்பட வேண்டும் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு கலைக்கப்படல் வேண்டும் சுருங்கக் கூறின் இயக்கம் முழுவதுமே மறுசீரமைக்கப்பட வேண்டும். தன்னுட்சி உரிமையுள்ள சங்கங்கள் இருத்தல் வேண்டும் அவை சிறு சங்கங்களாக இருத்தல் வேண்டும். இரண்டாம் மட்ட சங்கங்கள் இருத்தல் வேண்டும். நாடு முழுவதற்கும் ஏறக்குறைய 10 ஆயிரம் அல்லது 15 ஆயிரம் சங்கங்கள் இருக்கலாம்.

இப்பொழுது இயங்கும் பெரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்கள் குலைக்கப்பட வேண்டும். இரண்டாம் மட்ட சங்கங்கள் காரியாதிகாரி பிரிவு அடிப்படையிலேயோ அல்லது மாவட்ட அடிப்படையிலேயோ அமைக்கப்படலாம்.

திரு. வீரமன்: இப்பொழுதுள்ள சங்கங்களைக் கலைக்காது சிறிய சங்கங்களை அமைப்பதற்கு அரசு அனுமதித்தால் என்ன? நிர்ப்பந்தம் எதுவும் இருத்தலாகாது.

திரு இராச: சங்கங்களை அமைப்பதில் கஷ்டம் ஏற்படலாம் மக்களுக்கு எல்லாவசதிகளும் அளிக்கப்பட வேண்டும். திணைக்களம் இதற்கு முழு ஆதரவும் கொடுக்காதிருக்கலாம்.

திரு: வீர: ஆதரவளிப்பது அவர்களது கடமை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்கள் உதவ வேண்டும்.

திரு: இரா: சிறிய சங்கங்கள் அமைக்கப்படும்போது பெரிய சங்கங்கள் மறையத் தொடங்கும். சிறிய சங்கங்களை அமைப்பதற்கு மக்களை அனுமதித்து அவற்றைப் பதிவு செய்ய அரசு தயாராக இருந்தால் இத்தகைய சங்கங்களை பதிவதில் கஷ்டங்கள் ஏற்படமாட்டா. கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு முன் வருபவர்களுக்கு கூட்டுறவு உதவி ஆக ஆணையாளர்கள் ஊக்கமளித்தல் வேண்டும். தடைகள் எதுவும் இருக்கக் கூடாது.

திரு: டி. மெல். சிறிய சங்கங்கள் நிறுவப்பட்டால் அவற்றிற்கிடையே பணியாளர்களைப் பகிரலாம். 15—20 வீத பணியாளர்கள் ஓய்வு பெற்றவர்களாக இருக்கின்றனர். இளைஞர் வேலை வாய்ப்புப்பெற இடைஞ்சலாக இருக்கின்றனர்.

திரு: இரா: அவர்கள் எல்லோரும் நாளாந்த ஊதியம் பெறுபவர்கள். அவர்களுக்கு ஆழ்ந்த அனுபவம் இருக்கிறபடியால் அதிக ஊதியம் வழங்கப்படுகிறது

## கிளைகளுக்கு பூரண அதிகாரம்

கிளைகளுக்குப் பூரண அதிகாரம்கொடுத்து இயங்கச் செய்யவேண்டும். ஏனெனில் அதனுடைய ஒவ்வொரு அதிகாரத்துடனும் அபிவிருத்தித்திட்டங்களைச் செயற்படுத்த முடியும்.

இவ்வாறு வலி கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கத்தின் அச்சுவேலி கிளையின் சார்பில் சாட்சியமளித்த திரு ச. லோகீஸ்வரன் குறிப்பிட்டார்.

மேற்படி கிளையைச் சேர்ந்த திருவாளர்கள் வே. திருப்பரம்சோதி, க. ச. சோமசுந்தரம், வ. வேலாயுதம், க. சின்னத்துரை, இ. நடராசா, க. வீரசிங்கம், வ. மாணிக்கம், க. சிவபாதசுந்தரமூர்த்தி, ஆ. வேலுப்பிள்ளை ஆகியோரும் சாட்சியக் குழுவில் சமுகமாயிருந்தனர்.

திரு. லோகீஸ்வரன் மேலும் பேசுகையில், இப்பொழுது நாங்கள் ஒரு சங்கத்தில் ஓர் அலுவலைச் செய்யவேண்டுமானுல் முகாமையாளரைக் கண்டு, பின்பு தலைவரைக் கண்டு கந்தோருக்குப்போகவேண்டியிருக்கிறது. சில சமயம் கந்தோர் பூட்டியும் இருக்கிறது. ஆதலால் கிளைகளுக்கு அதிகாரம் கொடுத்தால் இவைகள் சீரான முறையில் நடக்கும் என்று தெரிவித்தார்.

இப்பொழுது இருக்கும் இயக்குநர் சபைகள், தொழிலாளர்கள் விடயங்களில் நேரடியாக ஈடுபட்டு அவர்களுக்கு இடையூறு விளைவித்துக்கொண்டிருக்கிறுர்கள். இயக்குநர் சபையில் உள்ள ஒருவருக்கு ஒரு பணியாளர் இசைவாக நடக்காவிட்டால் அவரை வேலையிலிருந்து நிற்பாட்டத்தக்கதாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. தேவநாயகம்: சபையிலுள்ள மற்றவர்கள் அது தவறு என்று கண்டால் அதற்கு ஒத்துக் கொள்ளாமலும் இருக்கலாமல்லவா?

## அரசியல் தலையீட்டால் இரு பிரிவு

திரு லோகீஸ்வரன்: அரசியல் தலையீடு இருப்பதால் மக்களால் தெரிந்து அனுப்பப்பட்டவர்கள் ஒரு பிரிவாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்ருெரு பிரிவாகவுஞ் செயற்படுகிறுர்கள். நியமனம் பெற்றவர்கள் 9 பேராகவுந் தெரிவு செய்யப்பட்டவர்கள் 5 பேராகவும் இருப்பதால் நியமனம் பெற்றவர்கள் தங்களுக்குத் தேவையானதைப் பெற்றுக் கொண்டு போகிறுர்கள். உதாரணமாக ஒரு கிளையில் தற்தறைவு ஏற்பட்டால் முகாமையாளருக்கு இயக்குநர் ஆதரவாக இருந்தால் அவர் திரும்பவும் அதே வேலையில் இருக்கலாம்.

திரு. தேவ: பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அது மக்களின் தெரிவுதானே. அதாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் எல்வாறு மக்களுக்கு விரோதமாக நடக்க முடியும்.

திரு. லோ: இயக்குநர் சபைக்கு ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே எமது கருத்து. கூட்டுறவில் அரசியல் ஆதிக்கம் இருக்கக் கூடாது. ஆலோசனைகள் வழங்குவதற்காகமட்டும் திணைக்களங்களைச் சேர்ந்தவர்களும் வங்கியைச் சேர்ந்தவர்களும் இருக்கலாம்.

## இயக்குநர் சபை வேலை வழங்குமிடம்

ஒவ்வொரு இயக்குநர் சபையும் எவ்வளவு பேருக்குத் தாம் உத்தியோகம் வழங்க முடியும் என்பதை எண்ணி வேலை வழங்கும் தலங்களாக இயங்குகின்றனவே தவிர சங்கத்தை முன்னேற்றத் தயாராக இல்லை. முன்பு நடைபெற்றதுபோல இப்பொழுது ஒரு சங்கத்திலாவது விற்பனை நடைபெறுவதில்லை என்று அவர் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

விவசாயத்தில் பெருமளவு ஈடுபட்டுவரும் எமது வலி கிழக்குப் பகுதியில் விவசாயப்பகுதி நன்ருக இயங்கவில்லை. ஒரு கிளைச்சங்கத்திலுள்ளவர்களுக்குத் தேவையான மண்வெட்டி, கிருமிநாசினி, உரம் முதலியவை பூரணமாக வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. ஒரு கிளையில் விற்கப்படும் மருந்தின் விலையைவிட அக்கிளையின் முன்பு இருக்கும் தனியார் கடையில் விலை குறைவாகவேஇருக்கிறது.

ஜனப் அபுசாலி: இது முகாமைச் செயற் திறன் இன்மையைத்தான் காட்டுகின்றது.

## கிராமசபை எல்லைக்கு ஒரு சங்கம்

தொடர்ந்து சாட்சியமளிக்கையில் திரு. லோகீஸ்வரன் கூறியதாவது: வலிகாமம் வடக்குச் சங்கத்தை 4 கிராமசபைப்பகுதிகள் சேர்ந்தவையாக இருக்கின்றன. இது பெரிதாக இருப்பதால் கூட்டுறவு இயக்கம் பரவலாக்கப்படும்போது புத்தூர் கிராமசபைப்பகுதிக்கு ஒரு சங்கம் தனித்து அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமசபை எல்லைக்குள்ளும் ஒவ்வொரு சங்கம் அமைக்கப்பட வேண்டும்.

திரு. தேவ: எல்லா இடத்திலும் அப்படிச் செய்யாதிருக்கலாம். ஏனெனில், சில கிராமசபை எல்லைகள் பெரிதாக இருப்பதால்ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களையும் அமைக்க நேரிடலாம்.

திரு. டி, மெல்: பங்கீட்டுப்புத்தகம் எடுக்கப்பட்ட பின்பு அரிசி விற்பனை எந்தளவிற்குக் குறைந்திருக்கிறது.

திரு. லோ: முப்பத்தைந்து வீதம்.

திரு. டி மெல்: புத்தகம் வைத்திருப்பவர்கள் இப்போது எங்கே அரிசி வாங்குகிறுர்கள்.

திரு, லோ: தனிப்பட்ட வியாபாரிகளிடம். ஏனெனில் அரசாங்கம் அவர்களுக்கு அரிசி கொடுக்கிறது.

திரு, தேவ: உங்களிடம் நல்ல அரிசி இல்லையா?

திரு லோ: எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை.

திரு தேவ: இப்பொழுது சங்கங்களுக்கு நெல் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் ஓர் அரிசி ஆலையை வைத்து நெல்லைக் குற்றி நல்ல அரிசியைக் கொடுக்கலாமல்லவா?

திரு. லோ: அதை வேற்கிறோம். இப்போ... சங்கக்கடையில் நல்ல அ... இல்லை என்றும் நி... குறைத்துத்தான் விற்ப... நடைபெறுகின்றதென்... ஒரு அபிப்பிராயம் இரு... றது அதனை இதன்மூ... போக்கலாம்.

## தேசிய பேரவை உறுப்... னர் சாட்சியம்

27-5-78 ல் நடைபெ... விசாரணையின் போது சா... சியமளிப்பதற்குச் சமு... மளித்திருந்த வடபகு... தேசியப் பேரவை உ... பினர்கள் வருமா... திரு க. பொ இரத்தின... (தே பே. உறுப்பினர் ஊ... காவற்றுறை) திரு ... துரைரத்... ... உறுப்பின... பருத்தி... துறை) திரு. த இராசலி... கம் (தே. பே. உறுப்பின... உடுப்பிட்டி) திரு மு சி... சிதம்பரம் (தே. பே. உறு... பினர் நல்லூர்) திரு. ... கதிரவேற்பிள்ளை (தே.பே... உறுப்பினர் கோப்பா... திரு. வி. தர்மலிங்க... (தே. பே உறுப்பினர் உ... வில்) திரு. V. யோகே... வரன் (தே. பே. உறுப்... னர் யாழ்ப்பாணம்) தி... ஆனந்தசங்கரி (தே. பே... உறுப்பினர் கிளிநொச்...

## மக்களின் நேரடிப் பங்...

திரு. கதிரவேற்பிள்ளை... கூட்டுறவு இயக்கத்திற்... மீண்டும் ஜனநாயக உரிமை... களைக் கையளிக்க வே... டும் இதனை நிருவகிக்கு... பொறுப்பை ... மக்க... ளுக்கே கையளித்தல்வே... டும். நாட்டின் அபிவிருத்... யில் மக்கள் பங்குபற்ற... தற்கு அரசாங்கம் தூண்... தல் அளிக்க வேண்டும்.

திரு. துரைரத்தினம்: கூட்... டுறவு இயக்கத்திற்கு... செம்மையான இடத்திற்... மீண்டும் அதனைக் கொண்... வரவேண்டும் என்று ந... விரும்புகிறோம். மக்க... இதில் நேரடியாகப் பங்... பற்றுதல் வேண்டும். ஆ... பத்தில் இந்த இயக்... உண்மையான கூட்டுற... இயக்கமாக இருந்த... காலப்போக்கில் அத... தன்மை இல்லாதுபோ... விட்டது. குறிப்பா... கடந்த 7 ஆண்டுகளில் ... சிலரின் கருவியாக அ... மாறிவிட்டது கூட்டுறவு... சங்கங்களை உத்தியோ... பூர்வமாக அவற்றின் ... மதி செல்மதிகளோ... பழைய நிலைக்குக் கொண்... வரவேண்டும். உறுப்... மைக் கட்டணம் ஆ... குறைந்தது ரூ 50/- ... இருத்தல் வேண்டும்.

திரு தேவநாயகம்: உறு... புரிமைப் பணமாக ரூ 1... இருத்தல் வேண்டுமென்... சிலர் கருத்துத் தெரிவ... திருக்கிறுர்கள்.

திரு துரை: உறுப்பின... கள் சோர்வடைய... தமது சங்கங்களில் தெ...

---

# கடற்றொழிலாளருக்கு வங்கிக் கடன்

கடற்றொழிலாளருக்கு உதவியளிக்கும் முகமாக கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ப. நோ. கூ. சங்க தொழிற்பாப்புக்களிலும் மீன்பிடி துறைமுகப் பகுதிகளிலும், கடல் தொழில் துறை வங்கிகள் திறக்கப்படவிருக்கின்றன.

இந்த வங்கிகள் தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன்களை வழங்கும். மீன்பிடி உபகரணங்கள், வலைகள் வெளியிணைப்பு இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கும், பழுது பார்த்தல் செலவுகளுக்கும் கடன்கள் வழங்கப்பட இருப்பதோடு வீடுகள் கட்டுவதற்கும் வீட்டுத்தேவைகளுக்கும் கடன்கள் வழங்கப்படும். விற்பனையிலிருந்து ஒரு பகுதியினைச் செலுத்தி தடவைப் பணம் முறையிலே இக்கடன்களைத் திருப்பிக் கொடுக்கலாம்.

இத்தகைய முதலாவது வங்கி கொழும்பு மாவட்டத்தில் கோறளை எல்லையில் இயங்கி வருகிறது.

# க் குறைக்க எண்ணியுள்ளோம்"

## ணியில் அமைச்சர் தேவநாயகம்

ரு. லோ: அதை வர
கிறோம். இப்போது
க்கடையில் நல்ல அரிசி
ல என்றும் நிறை
த்துத்தான் விற்பனை
பெறுகின்றதென்றும்
புபிப்பிராயம் இருக்கி
அதனை இதன்மூலம்
கலாம்.

**ய பேரவை உறுப்பி
சாட்சியம்**

-78 ல் நடைபெற்ற
ரணையின் போது சாட்
ளிப்பதற்குச் சமுக
திருந்த வடபகுதி
பப் பேரவை உறுப்
கள் வருமாறு:
க. பொ இரத்தினம்
பே. உறுப்பினர் ஊர்
ற்றுறை) திரு க.
ரக் [illegible] பே.
பினர் [illegible] ருக்நித்
) திரு. த இராசலிங்
தே. பே. உறுப்பினர்
பிட்டி) திரு மு சிவ
பரம் (தே. பே. உறுப்
நல்லூர்) திரு. சி.
வேற்பிள்ளை (தே. பே
பினர் கோப்பாய்)
வி. தர்மலிங்கம்
பே உறுப்பினர் உடு
திரு. V. யோகேஸ்
(தே. பே. உறுப்பி
பாழ்ப்பாணம்) திரு.
நசங்கரி (தே. பே.
பினர் கிளிநொச்சி)

**ரின் நேரடிப் பங்கு**

. கதிரவேற்பிள்ளை:
றவு இயக்கத்திற்கு
ம் ஜனநாயக உரிமை
கையளிக்க வேண்
இதனை நிருவகிக்கும்
[illegible] ம் மக்க
கையளித்தல்வேண்
நாட்டின் அபிவிருத்தி
மக்கள் பங்குபற்றுவ
அரசாங்கம் தூண்டு
அளிக்க வேண்டும்.

துரைரத்தினம்: கூட்
இயக்கத்திற்குரிய
மையான இடத்திற்கு
ம் அதனைக் கொண்டு
வேண்டும் என்று நாம்
புகிறோம். மக்கள்
நேரடியாகப் பங்கு
தல் வேண்டும். ஆரம்
ல் இந்த இயக்கம்
மயான கூட்டுறவு
கமாக இருந்தது.
போக்கில் அதன்
ம இல்லாதுபோய்
து. குறிப்பாக
7 ஆண்டுகளில் ஒரு
கருவியாக அது
விட்டது கூட்டுறவுச்
களை உத்தியோக
மாக அவற்றின் வரு
செலிமதிகளோடு
ப நிலைக்குக் கொண்டு
வண்டும். உறுப்புரி
கட்டணம் ஆகக்
ந்தது ரூ 50/- ஆக
தல் வேண்டும்.

தேவநாயகம்: உறுப்
ப் பணமாக ரூ 10/-
தல் வேண்டுமென்று
கருத்துத் தெரிவித்
கிறார்கள்.

துரை: உறுப்பினர்
சோர்வடையாது
சங்கங்களில் தொட

ர்ந்தும் அக்கறை கொண்
டிருக்கும் பொருட்டு உறுப்
புரிமைக் கட்டணம்
ரூ 100/- ஆக இருத்தல்
வேண்டும். ஒவ்வொரு பங்
கின் பெறுமதியும் ரூ 10/-
ஆக இருத்தல் வேண்டும்.
ஆரம்ப கட்டணமாக
ரூ 10/- செலுத்தப்பட்டு
பங்கு கொள்வனவு செய்
யப்படவேண்டும்.

திரு. வீரமன்: கிராம மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் உறுப்பினர்கள் பங்குபற்றுதல் மிக அவசியம். அப்பொழுது தான் ஆரோக்கியமான

பெற்றபோது திரு. க. பொ. இரத்தினம் கூறியதாவது: கிராம வங்கிகளைக் கூட்டுறவு வங்கிகளாக மாற்றலாம். கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுத் துறைக்கென வங்கிகள் நிறுவப்பட இருக்கின்றன.

துரை: ஒவ்வொரு மாவட்டமும் தனது சொந்த கூட்டுறவு வங்கியினை நடாத்தவேண்டும். இதன் மூலம் மாவட்ட கூட்டுறவு வங்கி உள்ளூர் சேமிப்புக்களை ஒன்று திரட்ட முடியும். வேறு வங்கிக

ளைத் தயும், அக்கறையையும் அவர்கள் கவர முடியும். கூட்டுறவு வங்கிகள் இயங்கும் அந்த வேளையில் மக்கள் வங்கியும் தொடர்ந்து இயங்க வேண்டும். கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கியில் உறுப்புரிமை பெற வாய்ப்பிருத்தல் வேண்டும். கடன் நோக்கங்களுக்காக மக்கள் வங்கி கூட்டுறவு வங்கிகளின் இணைப்பு வங்கியாகச் செயற்படலாம்.

**"வ. ஐ. மே. சபை, வட பகுதி விவசாய கூ. சமாசம், கூட்டுறவு வங்கிகள் ஆகியன மீண்டும் மக்களிடம் கொடுக்கப்பட வேண்டும்" — வடபகுதி தே. பே. உறுப்பினர் கருத்து**

ஒரு சூழ்நிலை உருவாகும். உறுப்பினர்கள் மேலும் சேர்வார்கள்.

திரு தேவ: இப்பொழுது உறுப்பினர் இயக்கத்தில் அதிகமாகப் பங்கு பற்றுவதில்லை.

கூட்டுறவு வங்கிகள் குறித்து உரையாடல் நடை

களில் பணத்தை இடுவதிலும் பார்க்க தமது கூட்டுறவு வங்கியில் சேமிப்பதைத்தான் உள்ளூர் மக்கள் பெரிதும் விரும்புவர். ஒரு கூட்டுறவு வங்கி தனது தொழிற் பரப்பை நன்கு அறிந்திருக்குமாதலால் மக்களின் நல்லெண்ணத்

### கிராம மட்டத்தில் ப. நோ. கூ. ச.

கிராம மட்டத்திலும், நகரமட்டத்திலும் சங்கங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து உரையாடல் நடைபெற்ற போது திரு. துரைரத்தினம் கூறியதாவது: எனது தனிப்பட்ட கருத்து ப. நோ கூ ச கிராம மட்டத்தில் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். நகர மட்டத்தில் பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்படலாம். இவை சிறு கைத்தொழில்களையும் மேற்கொள்ளலாம்.

திரு க. பொ இரத்தினம்: கடந்த ஏழு ஆண்டுகளில் உண்மையான கூட்டுறவாளர்கள் நெறியாளர் குழுக்களில் இடம்பெற வாய்ப்பிருக்கவில்லை.

திரு. தேவ: மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்களை அரசாங்கம் பங்கிட வேண்டியிருப்பதால் பாவனையாளர் சங்கங்கள் இன்றியமையாதவையாய் ஆகின்றன. கூட்டுறவு இயக்கத்தை சுதந்திரமான இயக்கமாக அபிவிருத்தி செய்வதற்கு தனிவேறான பாவனையாளர் சங்கங்கள் இருத்தல் வேண்டும்.

### அரசாங்க நியமனம் ஆபத்து

திரு க. பொ. இரத்தினம்: சிறு கைத்தொழில் உற்பத்தியைப் ப. நோ. கூ. சங்கங்களின் பொறுப்பில் விட வேண்டும்.

திரு. துரை: தனியார் துறையின் போட்டிகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் நகர்ப்புறங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும்.

திரு. க. பொ. இ: அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களை நெறியாளர் குழுவில் இடம்பெறச் செய்வது ஆபத்தானது. அவர்கள் அரசு இயந்திரத்தின் பாகங்களாக இருப்பதனால் உண்மையான கூட்டுறவாளர்களுக்கு இடமில்லாது போய்விடும். தமது சொந்த அலுவல்களை கூட்டுறவாளர்கள் நிருவகிக்க முடியாது போய்விடும். இதனால் ஊழல் மலிந்து விடும். அரசாங்கக் கட்டுப்பாடு இருத்தலாகாது. கூட்டுற

வாளரின் நலன் கருதி அரசாங்கக்கட்டுப்பாடு இருக்க வேண்டுமானால் மிகவும் குறைவாகவே இருக்க வேண்டும். நாம் வர்த்தக அடிப்படையில் வியாபாரம் செய்ய வேண்டுமாயின் தனியார்துறையுடன் போட்டியிடத் தயாராக இருக்க வேண்டும். உறுப்பினர்கள் அல்லாதவர்களின் தேவைகளையும் நாம் பூர்த்தி செய்ய விழைய வேண்டும்

திரு தேவ: உறுப்பினர்களின் தேவைகளைக் கணிப்பிட்டு கொள்வனவுகளை அத்தேவைகளுக்கு அமைவாகச் செய்தல் அவசியம். கொள்வனவு உத்தியோகத்தரினதும், நுகர்ச்சி முகாமையாளரினதும் விருப்பப்படி கொள்வனவு செய்வது அனுமதிக்கப்படின் சங்கத்திற்குப் பெரிய நட்டம் ஏற்படும்.

### தத்துவம் பெற்ற விநியோகத்தர்

திரு. க பொ. இரத் மாதாந்த சம்பளம் பெறும் உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகள் செய்து கொடுத்தல் வேண்டும். அவர்களுடைய சம்பளத்திற்கு அமைவாக இக்கடன் வசதித் தொகையை நிர்ணயித்து மாத முடிவில் அத்தொகையை அறவிடலாம். இதற்கு கடன் வசதி அட்டை முறையை நடைமுறைப்படுத்தலாம். மிகத் தொலைவிலுள்ள கிராமங்களில் தாய்ச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள முகவர்களை நியமிக்கலாம்: இப்பொழுது இத்தகைய கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுக்கு மாதாந்தம் ஏறக்தாழ ரூ 300/— சம்பளமாக வழங்கப்படுகிறது. இத்தகைய கிளைகளால் சங்கத்திற்குப் பெரிய நட்டம் ஏற்படுகிறது. தத்துவம் பெற்ற விநியோகத்தர் சுரண்டலில் ஈடுபடத் தொடங்கினால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

ஆனால் சங்கத்தால் நியமிக்கப்பட்ட முகவராய் இருப்பின் அவர்மீது கட்டுப்பாடுகளை விதித்து சுரண்டலைத் தவிர்த்துக் கொள்ளலாம். இந்த முகவரின் விற்பனை உரிமை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படலாம். இந்த முகவரிடமிருந்து சங்கம் பிணைப் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விற்பனையில் அவருக்கு ஒரு குறிப்பிட்ட வீதத்தை (கமிஷன்) வழங்கலாம். இதன் மூலம் முகவர் மீது ஒரு சங்கம் நேரடியான கட்டுப்பாட்டை வகிக்கும்: புதிய அமைப்பில் சங்கங்களுக்குக் கூடிய பணம் கொடுத்தால்தான் அவை பொருளாதார ரீதியாக இயங்கமுடியும். இன்றுள்ள நிலையில் ஏறத்தாழ எல்லாச் சங்கங்களுமே போதிய பணமில்லாது கஷ்டப் படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக சங்கங்கள் இப்படியான ஒரு நிலைக்கே தள்ளப்பட்டுள்ளன. எனவே இவற்றை மீட்பதென்றால் போதிய பணம் அவைகளுக்குப் பாய்ச்சப்பட வேண்டும்

### நியமனமும் கூட்டணியும்

நெறியாளர் குழு தெரிவுகள் பற்றிப் பேசப்பட்ட போது திரு. வீரமன் கூறியதாவது: தேர்தல் இடாப்புகள் தயாராக இருப்பதால் தேர்தலை உடனடியாக நடாத்தலாம். ஆனால் தேசியப்பேரவை உறுப்பினர் நியமனமுறை இருக்க வேண்டுமென வற்புறுத்துவதாக அமைச்சர் கூறுகிறார் அப்பொழுது திரு. துரைரத்தினம் திட்டவட்டமாகக் கூறியதாவது: தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் நாம் கூறுவது யாதெனில் நியமனங்கள் எம்மிடமிருந்து எடுக்கப்பட்டால் அது பெரிய ஆறுதலாக இருக்கும். நியமன அதிகாரத்தை நாம் விரும்பவில்லை. தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

## 'கூட்டுறவுக் கொழுவினிலே கோனே யாவோம்'

— கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை —

வேறு வேறு தொழில் முறையால் பேத மானோர்
வெவ்வேறு சமயவழி பிரிவுற் றோர்கள்
மாறுபாடாய் இருந்தாலும் மனிதர் என்றே
மதிக்கின்ற மாவுறவை வளர்க்க வேண்டி
தேறியநேர் அறிவுள்ளார் தேடித் தந்த
சீதனமே கூட்டுறவுத் திருவே யாகும்
ஆறுதலை அளிக்குமுயர் ஐக்கி யத்தை
அகிலமுமே ஆக்குதற்கு ஆட்சி கொள்வோம்

ஒட்டியுற வாடியுமக் குதவி யென்றே
உள்விழுந்து உரையளந்து ஊமை யாக்கித்
தட்டுகின்ற தரகனும்பின் தம்மைத் தாழ்த்தி
தஞ்சமென்றே ஓடிவரச் சமிக்கை செய்யும்
கட்டழகார் ஏழுவர்ணக் கொடியை ஏற்றிக்
காலமெலாம் விழாவெடுத்தல் கவினே யாகும்
திட்டமிடல் நற்சட்டம் திரட்டிக் கொள்ளல்
திருவார்ந்த கூட்டுறவின் சிகர மாமே!

வளமுள்ளோன் மிதமிஞ்சிக் கொட்டிக் கொள்வான்
வரட்சியுளோன் அதைக்கெஞ்சிக் கேட்டுக் கொள்வான்
இளநெஞ்சன் இதமாகக் கொடுத்துக் கொள்வான்
இரக்கமற்றோன் இல்லையென்றே இடித்துச் சொல்வான்
தளர்வில்லை தாழ்வில்லை தனதும் இல்லை
தனிவுமில்லை முனிவுமில்லை சமமார் வாழ்க்கை
உளமொன்றுங் கூட்டுறவை நாட்டிக் காத்தால்
உள்ளானும் இல்லானும் உலகில் இல்லை

பலமொன்றும் கூட்டுறவைப் பரவிக் காட்டப்
பாரெங்கும் விழாவெடுத்தல் பயனே யாகும்
குலமென்றும் குடிமையென்றும் குறைபா டின்றிக்
கூட்டுறவுக் கொழுவினிலே கோனே யாவோம்
பலவர்ணப் பட்டொளியே பாங்கா யொன்றிப்
பறக்கின்ற கொடிநிறைவைப் பகுத்துப் பார்த்து
நலமொன்றும் கூட்டுறவை நாடிப் போற்றி
நாமென்றும் நாட்டுயர்வை நயப்போம் வாரீர்!

## வளர்ச்சியுற்று வரும் நாடுகளின் கவலை

அபிவிருத்தியடைந்துள்ள சில நாடுகள் தமது உற்பத்தித் துறைகளைப் பாதுகாக்கும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களுக்கெதிராக கையாளும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வளர்ச்சியுற்றுவரும் நாடுகளின் பிரதிநிதிகள் அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற மகாநாட்டில்தமது ஆழ்ந்த கவலையையும் எதிர்ப்பையும் தெரிவித்தனர். அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் என்று அவர்கள் வேண்டிக்கொண்டதுடன், இத்தகைய நடவடிக்கைகள் குறித்த நோக்கத்தை எய்தத் தவறுவதுடன் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியினையும் பாரதூரமாகப் பாதிக்கும் எனச் சுட்டிக் காட்டினர். இம்மகாநாட்டில் அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் தென்கிழக்காசிய அலுவலகத்தின் இணைச் செயலாளர் திரு. M. பூரி பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

(முற்றொடர்)

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான பாடத்திட்டம்

கூட்டுறவுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட இவ்விடயத்தை இங்கு பிரசுரிக்கின்றோம் — ஆர்.

### அங்கத்தவர்களது உரிமைகள்

ஜனநாயக சமூக முறையின் கீழ் பொதுசன உரிமைகளுக்கு முதலிடம் கிடைத்துள்ளமை அதன் மிக முக்கிய இலட்சணங்களுள் ஒன்றாகும். கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக கொள்கைகளின் அடிப்படையில் இயங்குகின்றமையினால் அவற்றினாலும் அங்கத்தவர்களது உரிமைகளுக்கு பாதுகாப்பளிக்கப்படுகின்றது. கூட்டுறவு அங்கத்தவர்களுக்கு சொந்தமான உரிமைகளை கீழ்வருமாறு சுருக்கமாக எடுத்து குறிப்பிடலாம்.

1. சகல கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கும் சங்கத்தின் பங்குகளை கொள்வனவு செய்ய முடியும்.
2. பொதுச்சபைக்கு வருகை தர முடியும்.
3. வாக்களிப்புப் பலத்தினை உபயோகிக்க முடியும்.
4. சகல அங்கத்தவர்களுக்கும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் கடன் பெற்றுக் கொள்ளலாம்.
5. நிருவாக கிளைக்குழுவிற்கும், பணிப்பாளர் சபைக்கும் தெரிவு செய்யப்படலாம்.
6. ஏனைய உறுப்பினர்களதும் பங்குடன் நிர்வாக கிளைக்குழுவினை கலைத்துவிடும்படி வேண்டிக் கொள்ளலாம்.
7. தகராறுகளை தீர்த்து வைப்பதில் பங்கு கொள்ள முடியும். (இது விடயம் சம்பந்தமாக உபவிதியின் 11, 12, 13 சரத்துக்களிலும், கூட்டுறவு கட்டளைச் சட்டத்தில் 46, 48, 58 சரத்துக்களிலும் கவனம் செலுத்தவும்)

### அங்கத்தவர்களுக்கான கட்டுப்பாடுகள்

1. கூட்டுறவு சங்க அங்கத்தவர்களுக்கு உரிமைகள் கிடைப்பதைப் போன்றே அவர்கள் அங்கத்துவத்தினை பெற்றுக்கொண்ட பின்னர் சங்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும் உள்ளனர். இப்பொறுப்புக்களுக்கான சுபாவம், கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தமாகவும் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்திலும், சங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள உபவிதியிலும் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் ஒருவருக்கான பொறுப்புக்களை மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்கள், மட்டுப்படுத்தப்படாத பொறுப்புக்கள் என இரு பிரிவுகளாக பிரிக்க முடியும். எனினும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றினை பொறுத்து மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் என்ற கருத்தே முக்கியத்துவம் பெறுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களின் கீழ் சங்கத்தினால் வெளி நிறுவனங்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் பெறப்பட்ட கடன் சம்பந்தமாக பெற்றுக்கொண்டுள்ள பங்குகளின் பெறுமானத்தை பொறுத்த மாத்திரம் அங்கத்தவர்களின் மீதான கட்டுப்பாடு காணப்படுகின்றது. இப்பொறுப்பு குறித்த ஒருவர் சங்கத்திலிருந்து விலகி இரு வருடங்கள் பூர்த்தியாகும் வரையிலும் நிலவக்கூடியது. மேலும் சம்பந்தப்பட்ட நபர் காலம் சென்றவிடத்தும் இரு வருடங்கள்வரை இப்பொறுப்பு அவரது சொத்துக்களை பாதிக்கக் கூடியது. ஆதலினால் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் ஒருவருக்கான பொறுப்பு மிகப் பொறுப்புவாய்ந்ததொன்றென குறிப்பிட முடியும்.

(உபவிதியின் 15வது சரத்தில் கவனத்தினை செலுத்தவும்)

2. கூட்டுறவுச் சங்கமொன்றின் அங்கத்தவர் ஒருவர் சம்பந்தப்பட்ட வகையில் இதனைத் தவிர்த்து வேறுவிதமான பொறுப்புக்களும் காணப்படுகின்றன. கூட்டுறவு கட்டளைச்சட்டத்தின் 21, 22, 23 சரத்துக்கீழ் கட்டாய சந்தைப்படுத்தல் என்னும் ஒரு பொறுப்பும் நிலவி வருகின்றது. கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் ஒருவர் உற்பத்தி செய்கின்ற பொருட்களை கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு விற்பனை செய்வதற்கு ஒப்பந்தமொன்று செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் அவற்றினை கட்டாயமாக சங்கத்திற்கு விற்பனை செய்ய அவர் கட்டுப்படுகின்றார். இதனை மீறுகின்ற பட்சத்தில் ஒப்பந்த சட்ட திட்டங்களின் கீழ் அதற்கான சரத்துக்களை மீறுவதாகக் கருதப்படும்.

3. கூட்டுறவுச் சங்கமொன்றிற்கான விடயங்களை மேற்கொள்ளும்போது பின்பற்றப்பட வேண்டிய சட்டதிட்டங்கள் உள. இதனை உபவிதி என குறிப்பிட முடியும். உபவிதி பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அதற்கமைய கடமை புரிவதற்கு சகல அங்கத்தவர்களும் கட்டுப்பட்டுள்ளனர். (உபவிதியின் 29 வது சரத்து)

### அங்கத்துவத்தினை அதிகரித்துக் கொள்ளுதல்

கூட்டுறவுச் சங்கங்களை பொதுமக்கள் அமைப்புக்களாக அறிமுகம் செய்ய முடியும்.

இவற்றின் வெற்றி பொதுமக்கள் இவற்றுள் எவ்வளவு தூரம் கலந்து கொள்கின்றார்கள் என்பதில்தான் தங்கியுள்ளது. ஆதலினால் கூட்டுறவுச் சங்கமொன்றினை சிறந்த முறையில் இயக்குவதற்கு அவற்றினுள் பொதுமக்கள் பங்கினை அதிகரித்தல் அத்தியாவசியமானது இது விடயத்தில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய பலவித நுட்பமுறைகள் காணப்படுகின்றன.

### அ. ஊக்குவிப்பிற்கான மார்க்கம்

1. சன்மானம் வழங்குதல் ஊக்குவித்தலை அங்கத்துவத்தினை அதிகரித்துக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சிறந்த ஒரு நுட்ப முறையாகக் குறிப்பிட முடியும். கூட்டுறவுச் சங்கங்களின் இலாபம் பங்கீடு செய்யப்பட்டதன் பின்னர் மேலதிகமிருப்பின் அதனை கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட விகிதாசாரத்திற்கு அமைய அங்கத்தவர்களுக்கும், அங்கத்தவர் அல்லாதாருக்கும் பகிர்ந்தளிக்க முடியும். அங்கத்தவர் அல்லாதவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுவதனால் அவர்களை அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

2. ஏனைய தொழில் நிறுவனங்களில் கழிவுகள் (சலுகைகள்) வழங்கப்படுவது போல் கூட்டுறவுச் சங்கங்களிலும் வாடிக்கைக்காரர்களுக்கு உடனடி சலுகைகள் வழங்கப்படலாம். இதனாலும் அங்கத்தவர்களை ஊக்குவித்து பொதுமக்கள் பங்கினை அதிகரித்துக் கொள்ள சந்தர்ப்பமேற்படும்.

### ஆ. பிரசார விடயங்களின் மூலம்

தொழில் நிறுவனங்கள் தமது விற்பனையினை அதிகரித்துக் கொள்வதற்காக

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

---

(முற்றொடர்)

# 19ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின் முக்கிய போக்குகள்

இந்த அடிப்படையில் ஈழத்துப் பாவலர் துரையப்பாபிள்ளையையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடைத்தாகும். பொதுமக்களிடையே அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பதங்கள், கீர்த்தனைகள், கும்மிகள் ஆகியவற்றினை இவர் தேர்ந்தெடுத்து அந்தச் சந்தப் பாக்களிலே தமது கருத்துக்களைக் கூற முற்பட்டார். யாழ்ப்பாணத்துக்கான சமூகச் சீர்திருத்த முறைகளில் வர்த்தகர்களுக்கு அவர் முக்கிய இடம் கொடுத்திருந்தமை யாழ்ப்பாணச் சுதேசக் கும்மியிலும், எங்கள் தேச நிலைக் கண்ணியாலும் புலப்படுகிறது. 20ம் நூற்றாண்டுக் கவிதை வடிவங்களின் தன்மையை இவரது பாடல்களின் போக்குப் பெரிதும் பாதித்ததெனலாம். 19-ம் நூற்றாண்டு என்னும்போது ஆறுமுகநாவலர், இராமலிங்கம்பிள்ளை, வேதநாயகம்பிள்ளை ஆகியோரது நூற்றாண்டென்றே கூறலாம் இக்காலத்து முக்கிய இலக்கியப் போக்குகளை அவர்களது ஆக்கங்களிலிருந்து நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது. உரை நடையும், புதினங்களும், மொழி பெயர்ப்புக்களும் குறிப்பாக இக்காலத்திற்றான் எழுந்தன. அயல் நாட்டாதிக்கத்தை எதிர்த்துத் தமிழ்ச் சமயங்களையும் மொழியையும் வளர்க்கின்ற தேசியமும் மற்றவற்றை எதிர்க்கின்ற உணர்வும் இலக்கியங்களில் மிகுந்தன. ஆங்கிலம் பயின்ற தமிழறிஞர்கள் பலர் தமிழுக்குப் பற்பல தொண்டுகளைச் செய்தனர். புதிய இலக்கிய வடிவங்கள். புதிய பொருளமைப்பில் உருவாகத் தொடங்கின. இவற்றிற்கெல்லாம் ஆங்கிலேயரது ஆட்சியும் ஒரு காரணமான போதும் அக்காலத் தமிழர்களது சிந்திக்கும் ஆற்றலும் இதற்குத் துணையானது சில குறிப்பிடத்தக்க தேசிய வீரர்களாக இலக்கிய கர்த்தாக்கள் உருவாகி தமிழ் இலக்கியத்திலே பல முக்கிய போக்குகளை உருவாக்கியதுடன் அவை பிற்கால இலக்கிய வளர்ச்சிக்கு வழியமைப்பதற்கானதொரு சூழலையும் உருவாக்கியது.

மனோன்மணி சண்முகதாஸ்

ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தமட்டில் அக்காலத்தில் உருவாகிய மாற்றங்கள் ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க திசை திருப்பு மையங்களாக அமைவதால் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஈழத்து இலக்கியத்தின் வளர்ச்சிக்கான கூறுகள் 19ம் நூற்றாண்டிற்றான் உருவாக்கப்பட்டன. அது மட்டுமன்றித் தென்னகத்திற்கு வழிகாட்டிகளாகவும் அக்கால இலக்கிய கர்த்தாக்கள் விளங்கியுள்ளனர். 19-ம் நூற்றாண்டின் இறுதி இருபத்தைந்து ஆண்டுகள் இந்தியாவைப் பொறுத்தவரை முக்கியமானவை. கைத்தொழில் வளர்ச்சியும் புதிய மத்திய தர வர்க்கத்தின் எழுச்சியும் பலதுறைகளில் காணப்பட்டன. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கிலமொழி, நாகரீகம் முதலியவற்றினூடாக மேற்கத்திய சிந்தனைகள் பல இந்தியாவிலே ஊடுருவின.'' என்ற கலாநிதி க. கைலாசபதியவர்களின் கருத்து ஈழத்தைப் பொறுத்த மட்டிலும் பொருத்தமுடையதாக அமைகின்றது. குறிப்பாக ஈழத்து இலக்கிய வரலாற்றில் 19ம் நூற்றாண்டு உரைநடை வளர்ச்சிக்கும், உரைநடை இலக்கியங்களுக்கும், புதிய இலக்கிய வடிவங்களின் தோற்றத்திற்கும் இதுவே காரணமாயிற்று. இக்காலப் பகுதிபற்றிய இலக்கிய வரலாற்று ஆய்வினை மேற்கொள்பவர்கள் இப்பண்புகளையும் அக்கால இலக்கியத்தின் போக்குகளையும் உணர்ந்து கொண்டாற்றான் தெளிவான வரலாற்றினையும் அதன் போக்கினையும் உணர்ந்து கொள்ள முடியும். 19ம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியத்தின் போக்கு பிற்கால இலக்கிய வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதாகவே காணப்படுகின்றது. அக்காலத்தில் இலக்கியம் பற்றிய ஆய்வு இத்துறையில் மேற்கொள்ளப்படாதிருந்தபோதும் இன்று அப்போக்குகளை இனங்கண்டு கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளுவது சுலபமானதாகும்.

(முற்றும்)

# இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம்

இருபதாம் நூற்ருண்டின் துவக்கத்தில் இந்தியாவில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கம் தோன்றலாயிற்று 1912-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சட்டமும் இதனை ஏற்றுக்கொண்டது. நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட இவ்வியக்கத்தில் நமது நாட்டுக்கொள்கைக்கும் வெளிநாட்டில் உள்ள இவ்வியக்கத்தின் கொள்கைகளுக்கும் வேறுபாடு எதுவுமில்லை.

பொருட்களை நியாயமான விலைக்கு விற்பது, சுத்தம், தரம், குறித்த எடையளவு முதலியவற்றைக் கடைப்பிடிப்பது போன்ற முக்கிய கொள்கைகளை நுகர்வோர் கூட்டுறவுகள் பாதுகாக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவுக்கு இயைந்த முறையில் ஒரு விற்பனை அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம்தான் நுகர்வோர் கூட்டுறவின் கொள்கை காக்கப்படும். இலாப நோக்கைத் தவிர்ப்பது, உற்பத்தியாளருக்கும் உபயோகிப்போருக்குமிடையே இடைத்தரகர்களை ஒழிப்பது முதலியவை முக்கிய அம்சங்களாகும்.

## வளர்ச்சியும் தளர்ச்சியும்

1914–18-ன் போது நடைபெற்ற முதல் உலகப் போரின் போது நுகர் பொருள் தட்டுப்பாடும், விலை உயர்வும் மக்களைப் பெரிதும் பாதிக்கவே, நுகர்வோருக்கு உதவும் பொருட்டு கிராமப் புறப் பகுதிகளில் 100 கூட்டுறவுக் கடைகள் அமைக்கப்பட்டன (போர் நடந்து முடிந்தவுடன் இவை நிறுவப்பட்டன) 1930-ல் நுகர்வோர் கூட்டுறவுகளின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது மீண்டும், உலகில் தோன்றிய இரண்டாவது உலகப் போர் நுகர்வோர் கூட்டுறவுகளை மிகவும் பாதித்தது. அரசின் முகவராக இருந்து இந்தக் கூட்டுறவுகளே கட்டுப்பாட்டுத் துணிகளையும் பொருட்களையும் விநியோகித்து வந்தன. 1951–52-ல் இவற்றின் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. நுகர்வோர் கூட்டுறவுகளின் எண்ணிக்கை 9,757 – ஆக உயர்ந்தது. 1938 39-ல் 396 சங்கங்களுடன், ரூ 57 லட்சத்துக்கு வர்த்தகம் செய்த நுகர்வோர் கூட்டுறவுகள், 1951–52-ல் ரூ. 8 கோடியே 22 லட்சத்திற்கு வர்த்தகம் செய்திருந்தது. கட்டுப்பாட்டுப் பொருட்களின் விநியோகம் அகற்றப்பட்டபோது, 1960–61-ல் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 7,058-ஆகக் குறைந்து ரூ.4 கோடியே 42 லட்சம் அளவுக்கு மட்டுமே வர்த்தகம் நடைபெற்றது,

## சீரான விநியோகம்

தட்டுப்பாட்டுக் காலத்தில், விலைகள்மீது கட்டுப்பாடு, பண்டங்களின் உள்ளூர் இயக்கம் முதலிய அரசு நடவடிக்கைகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வந்தன. அத்தியாவசியப் பண்டங்களின் மீது சட்டரீதியான கட்டுப்பாட்டிற்கு, அதனைச் சிறப்பாகச் செயலாக்குவதற்கு அரசு இயந்திரம் பரந்த அளவில் முடுக்கி விடப்பட வேண்டும். இதற்கு மாநில அரசுகளின் செலவுப்பழுவும் மிக அதிகமாகவே ஏற்படக்கூடும்.

(வளரும்)

(முற்ருெடர்)

# கணக்கியல் விகிதாசாரங்களின் ஆய்வு

தொழிற்படு சொத்துக்களின் சுழற்சி முறை.
முதலீட்டின் மீது வருமான வீதம்.
(வரி நீக்க முன், வரி நீக்கிய பின்)

9.8. ஒப்பந்த வேலைப்பகுதி தொழிற்பாட்டு விகிதங்கள்

மூலப்பொருள் நுகர்வு தனி அலகுக்கு
வேதனம் தனி அலகுக்கு
ஏனைய செலவு தனி அலகுக்கு
மொத்த செலவு தனி அலகுக்கு.
மொத்த வேலை: அத்தாட்சிப்படுத்திய வேலை.
மொத்த வேலை: முடிந்த வேலை.
அத்தாட்சிப்படுத்திய வேலை பெற்ற பணம்.
சுத்த இலாபம் %
தொழிற்படு சொத்துக்களின் சுழற்சி முறை.
முதலீட்டின் மீது வருமான %
(வரிக்கு முன்; வரிக்கு பின்)

9.9. மொத்த தொழிற்பாட்டு விகிதங்கள

தொழிற்பாட்டுச் சொத்துக்களின் சுழற்சி முறை
நடப்புச் சொத்துக்களின் சுழற்சி முறை
சரக்கிருப்புச் சுழற்சி முறை.
நிலையான சொத்துக்களின் சுழற்சி முறை
உதவு தொகையில் பொதுப்பரிபாலனச் செலவு %
மொத்த இலாப %
சுத்த இலாப %
முதலீட்டின் மீது வருமான %

9.10. நிதி விகிதாசாரங்கள்

நடப்புச் சொத்து விகிதம்:
நியமம் 2:1

திரவச் சொத்து விகிதம்
நியமம் 1: 1

நீண்டகால விகிதம்:
நியமம்: 2.1.

அங்கத்துவ உரிமை விகிதம்:

நடப்புச் சொத்து / நடப்புச் செல்மதி

திரவச் சொத்து / நடப்புச் சொத்து

நிலையான சொத்து / நீண்டகாலக் கடன்

அங்கத்துவ உரிமை / மொத்தச் சொத்து

நிலையான சொத்துக்கும் நடப்புச் சொத்துக்குமுள்ள விகிதம்
மொத்த முதலுக்கும் சொந்த முதலுக்குமுள்ள விகிதம்.
நடப்புச் சொத்துக்கும் இருப்புக்குமுள்ள விகிதம்
நிலையான சொத்துக்கும் சொந்த முதலுக்குமுள்ள விகிதம்.

10. கணக்கை வியாக்கியானம் செய்பவர் பின்வரும் முடிவுகளை அடையக் கூடியதாக இருக்க வேண்டும்:

(அ) இலாபகரம்:

இலாபம் போதுமானதா?
இலாபகரத்தைப் பாதிக்கும் காரணிகள்
இலாபகரத்தை எதிர் காலத்தில் பாதிக்கக் கூடியவை?
இலாபகரத்தை எவ்வாறு விருத்திசெய்யலாம்?
இணைப்புக்கள் பலனளிக்குமா?

(ஆ) திரவத்தன்மை

கடன்களைத் தீர்க்க முடியுமா?
போதிய தொழில் முதல் உண்டா?
நடப்புச் சொத்துக்கள் எந்தளவுக்கு திரவத்தன்மையானது?
இலாபகர முயற்சிகள் பற்றுக்குறைத் தொழில் முதலால் பாதிக்கப்படுமா?

(இ) முதல் உரிமையாளர்

பங்காளரின் பங்கு முதல் எவ்வளவு?
திரண்ட இலாபங்கள் எவ்வளவு?
(ஐந்தொகை விகிதாசாரங்கள்)

அங்கத்தவர் உரிமை எவ்வளவு?
கடன் முதல் எவ்வளவு
கடன் முதல் வழங்கியவர்கள்
கடனுக்கு ஈடுவைத்த சொத்துக்கள் எவ்வளவு?
தேறிய பெறுமானம்

(ஈ) நிதிச் சக்தி

பாவிக்கப்படாத உச்சக் கடன் எல்லை
கடன்படக்கூடிய இயலுமை அளவு
தொழில் விசாலிப்புக்கு நிதிவளம் உண்டா?
அங்கத்தவர் பங்கு முதல் மூலம் மேலும் திரட்டக் கூடியது.
சேமிப்பு மூலம் மேலும் திரட்டக் கூடியது
இலாப மூலம் திரட்டக் கூடிய நிதி
பாவிக்கக்கூடிய வீணுக முடக்கம்

(உ) வியாபாரத்தின் போக்கு

வியாபாரச் சுழற்சி நிலையிலா வீழ்ச்சி நிலையிலா செல்கிறது?
செலவு விகிதாசாரங்கள் போகக்கு
பொருள் கிடைப்புப் போக்கு
இலாப உழைப்பின் போக்கு
எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களின் உழைப்பு எதிர்பார்க்கை
எதிர்கால வியாபாரத்திலுள்ள நம்பிக்கை
விலைத்தளம்பல் நிலை.

(ஊ) முதலுரிமையாளருக்கான பாதுகாப்பு

பங்குமுதல் கடன் முதல் பாதுகாப்பாக உள்ளதா?
வட்டி கடன் வட்டி செலுத்தக்கூடிய நிலை.
நம்பிக்கை வைப்புக்கள் (உ–ம் வேலையாளர் பிணை வைப்பு)
பாதுகாப்பாக உண்டா?
திரண்ட நிதிகள் செலுத்த முடியுமா? (பணக்கொடை, பணியாளர் சேம இலாபநிதி, வரி, கூட்டுறவு நிதி)
ஒதுக்கப்பட்ட இலாபங்கள் செலுத்தக் டியனவா? (உ-ம் பங்குவட்டி, ஆதரவுக்கு ஏற்ற தள்ளுபடி) பணியாளர் நன்கூலி வேதனம்)
எதிர்காலத்தில் உச்ச பங்குவட்டி செலுத்த முடியுமா?
பங்கு முதலுக்கான உண்மைப் பெறுமானம் பாதுகாக்கப்படுகின்றதா?

(எ) அங்கத்தவர்கள் முதல் வளர்ச்சி

அங்கத்தவர் முதல் வளர்ச்சி வேகம்?
மொத்த முதலில் அங்கத்தவர் முதல் என்ன?
அங்கத்தவர் முதல் வளர்ச்சிகு உதவுவதில் காட்டும் கரிசனை
அங்கத்தவர் முதலுக்கும் கடன் முதலுக்குமுள்ள விகிதாசாரத்தில் சாதகமான மாற்றத்துக்கு இடமுண்டா?

(ஏ) சொத்துக்களின் எதிர் காலம்

உழைப்புச் சக்தி பாதுகாக்கப்படுமா?
வழமை மாறும் ஆபத்தினள
பணவீக்கக் காலத்தில் பிரதியீட்டுக்கு மேலதிகமாகத் தேவைப்படும் நிதி திரட்டப்பட்டுள்ளதா?
தீ, களவுகளுக்கெதிரான பாதுகாப்பு
கடன்களுக்கு ஈடாகப் பெற்ற ஆவணங்களின் நிலை
கடன்பட்டோரின் நிதி நிலை.

11. கிடைக்கக் கூடிய அகச்சான்று புறச்சான்றுகளின் படி இலாப நட்டக் கணக்குகள் உண்மையான இலாப / நட்டத்தை வெளிப்படுத்துகின்றதா? ஐந்தொகை உண்மையான பணநிலையைக் காட்டுகிறதா? என்பதனை மட்டும் ஆராய்வதுடன் எண்பார்வையாளர் நின்று விடாமல் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத் திறனை வளர்ப்பதற்கான சிறந்த ஆலோசகர்களாகவும் தொடர்ந்து சேவையாற்றுவதற்கு, விகிதாசார உபயோகம்பற்றிய ஆய்வைப் ப'ன் கொள்வீர்களென எதிர்பார்க்கிறேன்.

(முற்றும்)

ஆர். எம். நாகலிங்கம்
விரிவுரையாளர்
கூட்டுறவுக்கல்லூரி, பொல்கொல


## வீரசிங்கம் மண்டபம்

### வாடகைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| 1. இசை, நடனம், நாடகம் | | |
| இரவு 5 மணித்தியாலங்கள் | ரூபா | 350– |
| பகல் ,, ,, | ,, | 300– |
| 2. கூட்டங்கள், மகாநாடு | | |
| இரவு 1 மணித்தியாலம் | ,, | 125– |
| மேலதிகம் | ,, | 50– |
| பகல் 1 மணித்தியாலம் | ,, | 100– |
| மேலதிகம் | ,, | 50– |
| 3. திருமணம் 3 மணித்தியாலம் | ,, | 350– |
| மேலதிகம் | ,, | 75– |
| வைப்புப்பணம் இரவு | ,, | 250– |
| பகல் | ,, | 150– |

(4ப் பக்கத் தொடர்ச்சி)

# சங்க எல்லைப்பரப்பைக்...

கூட்டுறவுச் சங்கங்களில் கணக்குகள் குழப்ப நிலையில் உள்ளனவென்று சுட்டிக்காட்டப்பட்டபொழுது திரு. கதிரவேற்பிள்ளை தனி வேருன கணக்குப் பரிசோதனைத் திணைக்களம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அது ஜனாதிபதிக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கூட்டுறவுப் பண்ணைகளை நடாத்த விரும்பும் பாவனையாளர் சங்கங்களுக்கு அரசாங்கம் உதவியளிக்க வேண்டுமென்று திரு. துரைரத்தினம் கேட்டுக்கொண்டார்;

கிளைகள் பற்றியும், கிளைக் குழுக்கள் பற்றியும் பேச்சுக்கள் எழுந்தபோது இப்பொழுதுள்ள கிளை முறையை ஒழிப்பது உங்கள் உத்தேசமா என்று திரு. துரைரத்தினம் வினவினுர்.

திரு. தேவ: இப்பொழுதுள்ள ப. நோ. கூ. சங்கத்தின் எல்லைப்பரப்பைக் குறைப்பதற்கு நாம் எண்ணியுள்ளோம். இதன் மூலம் ஒவ்வொரு கிளையும் பொருளாதார ரீதியாக ஈடேறக் கூடியதாக இருக்கும்.

திரு. வீர: ஒரு காரியாதிகாரி பிரிவில் 4 அல்லது 5 ப.நோ.கூ.சங்கங்கள் இருக்கும்.

திரு. தர்மலிங்கம் கூறியதாவது: சங்கங்கள் விற்பனை நிலையங்களாக மட்டும் இருத்தல் கூடாது. அவை உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்களாகவும் இருத்தல் வேண்டும். இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரம் குறைந்துவிட்டது. பங்கீட்டுப் பொருள்களைத் தொடர்ந்தும் விற்பனை செய்வதோடு சங்கங்கள் அமையாது ஏதாவது கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கு சங்கங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும், தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவ வேண்டும்.

திரு. கதிர: கூட்டுறவுத் திணைக்களம் மாகாண அடிப்படையில் பன்முகப் படுத்தப்படல் வேண்டும். எல்லாவிடயங்களும் பிரதேச அடிப்படையில் அப்பொழுது கவனிக்கப்படலாம்.

### சங்கத்திடமிருந்து தனிப்பட்ட வியாபாரிக்கு

ப. நோ. கூ. சங்கங்கள் நடாத்திவந்த எரிபொருள் நிலையங்களை எரிபொருள் கூட்டுத்தாபனம் கையேற்று தனிப்பட்ட வியாபாரிகளுக்கு ஒப்படைத்துள்ளது என்று திரு துரைரத்தினமும், திரு. கதிரவேற்பிள்ளையும் குற்றம் சாட்டினுர்கள். திரு. வே. யோகேஸ்வரன்: எம்முடைய ஆட்சேபனைகள் என்னவென்ருல் பீடிஇலைக்கோட்டாக்கள் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கப் படுகின்றன என்பதாகும். ப நோ கூ. சங்கங்களே பீடி இலை முகவராக நியமிக்கப்பட வேண்டும். சங்கங்கள் துணை முகவரை நியமிக்கலாம். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ப.நோ கூ. சங்கங்களுக்கு முகவர் உரிமையை வழங்கினுல் பீடிசுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு நியாயமான ஊதியம் வழங்கப்படுவது உறுதி.

தேசீயப் பேரவை உறுப்பினர்கள் தமது சாட்சியங்களை முடித்துவைக்கும் சந்தர்ப்பத்தில் திரு. துரைரத்தினம் பின்வருமாறு கூறினுர்: கூட்டுறவுச்சங்கங்கள் மீண்டும் மக்களுக்குக் கையளிக்கப்பட வேண்டும். கூட்டுறவு வங்கிகளும் வ. ஐ. மே சபையும், வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசமும் மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதுவே வடபகுதி தேசீயப் பேரவை உறுப்பினராகிய எமது உறுதியான கருத்தாகும்.

### மக்கள் கைகளில் கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு இயக்கம் மீண்டும் மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று திடமாக நான் கூறுகின்றேன் என திரு. எஸ் தம்பு சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சாட்சியமளிக்கையில் ஐக்கிய நாணய சங்கங்களும் பண்டசாலைச் சங்கங்களும் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டும். மாகாண அடிப்படையில் மேற்பார்வை செய்வதற்கென ஒரு நிறுவனம் அமைக்கப்படவேண்டும். சங்கங்களின் அபிவிருத்தியும் அவற்றின் மேற்பார்வையும் தேசிய மட்ட நிறுவனத்தின் பொறுப்பிலே மேற்குறித்த மாகாண, மாவட்ட நிறுவனங்கள் மூலம் செய்யப்பட வேண்டும் என்ருர்.

### ஒன்றுந் தெரியாதவர்கள்

தொடர்ந்து அவர் சாட்சியமளிக்கையில் கூட்டுறவின் கொள்கைகளைப்பற்றியோ அல்லது அதன் கடமைகளைப்பற்றியோ ஒன்றுமே தெரியாதவர்களே இன்று கூட்டுறவு இயக்கத்தில் இருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்களால் ஒரு சங்கத்தை வெற்றிகரமாக எப்படி நடாத்த முடியும். அரசாங்க நியமனமுறை வந்ததாலேதான் இப்படிப்பட்டவர்கள் நெறியாளர் சபையில் இடம்பெற்றிருக்கின்றனர்.

நான் கடந்த 28 வருடங்களாக கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகிறேன். சங்கங்களின் சிரேஷ்ட மேற்பார்வையாளராகவும் சேவையாற்றியிருக்கிறேன். முன்பு ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதென்ருல் நாம் கிராமம் கிராமமாகச் சென்று கூட்டுறவுச் சங்கங்களின் உப விதிகளையும், சட்டங்களையும் பற்றித் தெளிவாக மக்கள் விளங்கிக்கொள்ளும்வரை அவர்களுக்கு எடுத்து விளக்குவோம் என்று கூறினுர்.

### சிறு சங்க அமைப்பு

தொழிற்பரப்பு எல்லையைப் பெரிதாகக் கொண்டு சங்கங்கள் இருக்குமானுல் ஒரு கிராமத்திலிருக்கும் சங்க உறுப்பினரைப்பற்றி இன்னொரு கிராமத்தைச் சேர்ந்த அதே சங்கத்தின் உறுப்பினருக்குத் தெரியாது. அது போலவே ஒரு கிராமத்தின் பொருளாதாரப் பின்னணியும் தேவைகளும், மற்றக் கிராமத்தவர்களுக்குத் தெரியாது, சிறுசங்கங்களாக இருந்தால் உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவும் வாய்ப்புண்டு உறுப்பினர்கள் சங்கத்தில் சிறப்பாகப் பங்குபற்றவும் முடியும். ஆதலால் சிறு சங்க அமைப்பின் மூலம் கூட்டுறவுக் கொள்கைகள் பேணப்படும் என்று திரு. தம்பு விளக்கினுர்.

### திணைக்களத்தின் அதிக தலையீடு

திரு. தம்பு தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சங்கங்களில் கூட்டுறவுத் திணைக்களம் அதிகமாகத் தலையிடுகின்றது. இன்று பல சங்கங்கள் வீழ்ச்சியடைந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் அரசாங்க உத்தியோகத்தர்கள் அவற்றில் உறுப்புரிமை வகிப்பதுதான். சங்கங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கூட்டுறவுப் பரிசோதகர்கள் இருக்கிருர்கள். அச்சங்கங்களின் எண்பார்வையினையும் கூட்டுறவுத் திணைக்களத்தின் எண் பார்வைப்பகுதியைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர்களே செய்கிருர்கள். ஒரு கூட்டுறவுப் பரிசோதகர் இன்னொரு கூட்டுறவுப் பரிசோதகரைக் காட்டிக் கொடுக்க மாட்டார் ஆதலால், எண்பார்வையினை கூட்டுறவுப் பரிசோதகர் செய்யாது வேறொருவர் செய்ய வேண்டும்.

திரு. வீர: கணக்காய்வாளர் நாயகத்தின் கீழுள்ள திணைக்களத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் எண்பார்வைகளைச் செய்வதற்கென ஒரு கிளை இருக்க வேண்டும் என்பதுபற்றி நாம் ஆலோசித்து வருகிரேம். எண்பார்வை செய்வதில் சுதந்திரமான ஒரு திணைக்களமாக அது இயங்கும். கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்த எண்பார்வையினை இது செய்யும்.

### நிதியுதவும் நிறுவனம்

திரு. தம்பு நல்லது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கும் ஒரு நிறுவனம் இருத்தல் வேண்டும். இத்தகைய நிறுவனம் இருந்தால் நாம் அரசாங்கத்தை எதிர்பார்க்கத் தேவையில்லை ஆதலால் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் பங்குகளை இட்டு இத்தகைய ஒரு நிறுவனத்தை உருவாக்க வேண்டும் இங்குள்ள வீரசிங்கம் மண்டபம் கூட்டுறவுக் கொள்கைகளில் மக்கள் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையை உண்மையான கூட்டுறவாளர்களின் உழைப்பையும் காட்டும் சின்னமாக விளங்குகின்றது.

கூட்டுறவாளர்களால் உருவாக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கிகளால் சுவீகரிக்கப்பட்டன. கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமான 51 வீத பங்குகள் இன்றும் மக்கள் வங்கியில் இருக்கின்றன. கடந்த அரசாங்கம் சர்வாதிகாரமாக இதனைச் செய்துள்ளது. இன்றுள்ள நிலையிலே நடைபெறவிருக்கும் மறுசீரமைப்பு கூட்டுறவு இயக்கத்தில் உண்மையான மாற்றங்களைக் கொண்டுவரும் என்று நான் நம்புகிறேன்.

எத்தகைய கடனும் மறுசீரமைக்கப்படும் புதிய அமைப்பினூடாக வழங்கப்பட வேண்டும். இப்போதுள்ள அமைப்பில் உறுப்பினர் பலவிதமான வழிகளில் கடனைப் பெறலாம். இவ்வழிகள் உறுப்பினரின் பொருளாதார நிலையைப் படிப்படியாகப் பாதித்து அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலைக்குத் தள்ளிவிடும்.

### அனுபவமுள்ள உத்தியோகத்தர்

கூட்டுறவுத் திணைக்களம் சிறந்த நிருவாகத்துடன் திறம்பட இயங்கவேண்டுமானுல் கூட்டுறவு ஆக்க ஆணையாளர், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்கள் முதலியோர் கூட்டுறவுத் துறையில் 10 அல்லது 15 வருடங்கள் கீழ்மட்டத்திலிருந்து சேவையாற்றி அனுபவமும் வளர்ச்சியும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். திரு. வீரமன் அத்தகைய அனுபவம் உடையவர் என்றபடியால்தான் அவர் ஆணையாளராக இருந்த காலத்தில் கூட்டுறவுத்துறை சிறப்பாக இயங்கியது. கூட்டுறவில் ஆர்வமில்லாதவர்கள் இத்தகைய உயர்ந்த பொறுப்பான பதவிகளில் இருப்பதால் இயக்கம் வளர்ச்சியடைய மாட்டாது.

(வளரும்)

---

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

# தமிழகத்தில்....

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மலைவாழ் மக்களுக்குப் பயிர்க்கடன், மற்றும் ஆடு, கறவை மாடு வளர்த்தல் போன்ற உபதொழில்களுக்காகக் கடன் அளிப்பதோடு அவசியப் பண்டங்கள் விநியோகம் செய்ய, சங்கங்களுக்குத் தேவைப்படும் கடனுதவியும் அளிக்கின்றன.

### சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

வேளாண்மைத் துறையில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அளிக்கப்படவேண்டிய கடன் வசதி மத்திய கூட்டுறவு வங்கிகளால் தனிக் கவனம் செலுத்தி அளிக்கப்படுகிறது. சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள், நிலமற்ற விவசாய குத்தகைதாரர்கள் தங்களது நிலங்களில் கிராமப்புறங்களில் உற்பத்தியை அதிகரித்து மேம்படவும் தீவிர உழவுத் தொழில்களில் ஈடுபடவும், துணைத்தொழில்களை மேற்கொள்ளவும் அதன் மூலம் அதிக வருமானம் பெற வாய்ப்பு ஏற்படவும் இந்தத் திட்டம் உதவுகிறது. பயிர் செய்யக் குறுகிய காலக் கடன்களும், கறவை மாடுகள் வளர்த்தல், கோழிப் பண்ணை நடத்துதல், ஆடுகள் வளர்த்தல் போன்ற துணைத்தொழில்களுக்கு மத்திய காலக் கடன்களும் வழங்கப்படுகின்றன. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டம் தமிழகத்தில் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகிறது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் வேளாண்மை கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தைப்போலவே, மத்திய வங்கிகள் நிதியுதவி செய்கின்றன.

### கடன் வசூல்

கடன் வசதி தடைபடாமலிருக்கக் கடன் வசூல் ஒரு அடிப்படைத் தேவையாகும். அண்மைக் காலத்தில் பல இடையூறுகளுக்கு இடையிலும் இணக்கமான முறையில் கடன் வசூல் செய்யும் பணியை மத்திய கூட்டுறவு வங்கிகள் சிறப்பாகச் செய்துள்ளன என்றே கூறலாம். 30–6–1977-ல் கேட்புத் தொகையில் வசூலிக்கப்படாமல் தவணை தவறி நின்ற கடன் அளவு 14·6 சத விகிதமாகும். இது 30–6–77-ல் 10·9 சத விகிதமாகவும், 30–6–1975-ல் 8 6 சதவிகிதமாகவும் இருந்தது.

வறட்சி நிலை ஏற்படும் போது குறுகிய காலக் கடன்களை மூன்று ஆண்டுகளில் திருப்பித்தரக்கூடிய மத்திய காலக்கடன்களாக மாற்றியமைத்து கடன் வாங்கியவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது. 1974–75-ல் தமிழகமெங்கும் பரவியிருந்த வறட்சி நிலையின்போது ரிசர்வ் வங்கியின் தேசிய விவசாய நிலக்கடன் நிதி உதவியுடன் ரூபா 34.10 கோடி அளவு குறுகிய காலக்கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டன. 1975–76 மற்றும் 1976 — 77 ல் முறையே ரூ. 13.15 கோடி, ரூ. 31.22 கோடி அளவுக்கு இத்தகைய நிவாரணம் வழங்கப்பட்டது.

—நன்றி: கூட்டுறவு

யா. மாநகர ப. நோ. கூ. ச. கிளையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் .244-78